விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: பதினாறு

Valampurii

சங்கு 12 வள்ளுவர் ஆண்டு 2041 மார்கழி 26 திங்கட்கிழமை (10.01.2011) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 022

ரா
ம்
கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து





கிழக்கு மாகாணத்தில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இரவு முதல் பெய்து வரும் மழையினால் பல பிரதேசங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. வெள்ளத்தினால் மக்கள் இடம்பெயர்ந்து பாடசாலைகள் மற்றும் பொது இடங்களில் தஞ்சம் அடைந்துள்ளனர். மழை வெள்ளப் பாதிப்புக்களை படங்களில் காணலாம்.

## வெள்ளம், மண்சரிவால் நாட்டில் 9 பேர் உயிரிழப்பு

### அனர்த்த முகாமைத்துவ நிலையம் தகவல்

(கொழும்பு)

நாட்டின் பல பாகங்களிலும் பெய்து வரும் அடைமழை காரணமாக பல இடங்களில் வெள்ளப்பெருக்கும் நிலச்சரிவுகளும் ஏற்பட்டுள்ளன. இந்த அனர்த்தங்களில் சிக்கி நேற்று மாலை வரை 9பேர் உயிரிழந்துள்ளதாக அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் பிரதிப் பணிப்பாளர் பிரதீப் கொடிப்பிலி தெரிவித்துள்ளார்.

அத்துடன் வெள்ளம் காரணமாக சுமார் ஏழரை இலட்சம் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என அவர் குறிப்பிட்டார். குறிப்பாக மட்டக்களப்பு மாவட்டத்தில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டோர் தொகை 4இலட்சத்து 82 ஆயிரத்து 830 பேர் என மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரச அதிபர் கே.விமலநாதன் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு பாதிக்கப்பட்டவர்களில் 14 ஆயிரத்து 549குடும்பங்களைச் சேர்ந்த 55 ஆயிரத்து 345பேர் 146 நலன்புரி முகாம்களில் தங்கியுள்ளதாகவும் 47ஆயிரத்து 656 குடும்பங்களைச் சேர்ந்த ஒரு இலட்சத்து 79 ஆயிரத்து 976பேர் நண்பர்கள், உறவினர் வீடுகளில் தங்கியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அம்பாறை தம்பிட்டியாய, பிரதேசத்தில் வெள்ளம் காரணமாக தத்தளித்து கொண்டிருந்த 11 பேரை இலங்கை விமானப் படை காப்பாற்றியதாக விமான படை பேச்சாளர் குறூப் கேப்டன் ஜானக நாணயக்கார தெரிவித்தார்.

இதேவேளை இலங்கை விமானப்படை மீ 17 ரக விமானம் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட தொப்பிகல மக்களுக்கு உலர் உணவு பொருட்களையும் பெல் 212 விமானம் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவியாகவும் செயற்படுகின்றது என அவர் குறிப்பிட்டார். (ந-5)

## விடுதலைப்புலிகளின் ஆயுதக் கப்பலை கண்காணிப்புக் குழு காப்பாற்றியது!

### விக்கிலீக்ஸ் அதிரடித் தகவல்

(நியூயோர்க்)

விடுதலைப்புலிகளின் ஆயுதக் கப்பல் ஒன்றுக்கு சரியான நேரத்தில் தகவல்களை வழங்கிய போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு அதனை இலங்கை கடற்படையினரின் தாக்குதலில் இருந்து காப்பாற்றியுள்ளதாக விக்கிலீக்ஸ் இணையத்தளம் அதிரடித் தகவல் வெளியிட்டுள்ளது. (16ஆம் பக்கம் பார்க்க)

## மன்னாரில் உறவினர்கள் சாட்சியம் சரணடைந்தோருக்கு என்ன நடந்தது?

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் இரண்டாவது நாளாக நேற்று கற்றறிந்த பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு தனது அமர்வை நடத்தியபோது பெரும் எண்ணிக்கையானவர்கள் தமது வாக்குமூலங்களைப் பதிவு செய்துள்ளனர்.

மடு, பெரியபண்டிவிரிச்சான் உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்தில் நடைபெற்ற இந்த அமர்வில் சுமார் 40 பேர் வரை சாட்சியமளித்தனர்.

· ஏனையோர் படிவங்களின் ஊடாக தமது மனக் குமுறுல்களை எழுதிக் கொடுத்தனர். காணாமல் போனவர்கள் இருக்கும் இடத்தை கண்டறிந்து அவர்களை விடுதலை செய்யவேண்டும் என பலர் இந்த அமர்வின்போது ஆணைக் குழுவினரிடம் கோரிக்கை விடுத்தனர். தடுப்பு (16ஆம் பக்கம் பார்க்க)

### வட்டுக்கோட்டைத் தொகுதி

## தமிழரசுக் கட்சித் தலைவராக பேராசிரியர் சிற்றம்பலம்

இலங்கை தமிழரசுக் கட்சியின் வட்டுக்கோட்டை தொகுதி செயற்குழுவை தெரிவதற்கான கூட்டம் பேராசிரியர் சி.க.சிற்றம்பலம் தலைமையில் பண்டத்தரிப்பிலுள்ள இலங்கைத் தமிழரசுக் கட்சிப் பணிமனையில் நேற்றைய தினம் பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெற்றது.

இதன்போது கட்சியின் வட்டுக்கோட்டை தொகுதிக்கான செயற்குழு தெரிவானது. தலைவர்:பேராசிரியர் சி.க.சிற்றம்பலம், செயலாளர்:தி.மா.மகேந்திரன் பொருளாளர்:நா. சிவசுப்பிரமணியன் இவர்களுடன் 18பேர் கொண்ட செயற்குழுவும் தெரிவுசெய்யப்பட்டது. (ந-5)

## யாழில் இடம்பெற்ற கொலைச் சம்பவங்கள் புலிகள் வந்துவிட்டதாக பொருள் அல்ல!



### பொலிஸ்மா அதிபர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் மேலதிக பொலிஸாரை கடமைக்கு அமர்த்தி பாதுகாப்பை உடனடியாக அதிகரித்தால் மக்கள் பதற்றமடைவார்கள்.

எனினும் குடாநாட்டின் சட்டம், ஒழுங்கை கடுமையாக அமுலாக்க பொலிஸார்நடவடிக்கைஎடுத்துள்ளனர்.

இவ்வாறுயாழ்ப்பாணத்திற்குநேற்றுமுன்தினம்விஜயம்செய்தபொலிஸ்மா அதிபர்மகிந்த பாலசூரிய மக்கள் பிரதிநிதிகள் முன்னிலையில் தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

யாழ். மாவட்டத்தில் கடந்த வருடம் 7 கொலைச்சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. இந்நிலைமை மற்றைய மாவட்டங்களுடன் ஒப்பிடும்போது மிகக் குறைவானது.

எனினும் இக் கொலைச் சம்பவங்கள் அரசியல் ரீதியானதோ, விடுதலைப் புலிகள் இயக்கம் மீளஆரம்பித்துள்ளதாகவோ பொருள்இல்லை. மாறாக ஆங்காங்கே (16ஆம் பக்கம் பார்க்க)

NIBM
BUILDING COMPETENCIES
Jaffna
யாழ்ப்பாணம்

O/L பரீட்சைக்கு தோற்றிய மாணவர்கள் மற்றும்
பல்கலைக்கழக அனுமதிக்கு காத்திருக்கும் மாணவர்களுக்கான
கணனிக் கற்கை நெறிகள் விரைவில் ஆரம்பம்

A statutory Body under the Ministry of Youth Affairs & Skills Development

T.P No- 021 222 0360 / 0361 / 0362

National Institute Of Business Management
No 40 College Road (opposite to Jaffna hindu play ground)
jaffna.

# அழகியற் பாட ஆசிரியர் நியமனம் விபரம் கிடைத்ததும் வழங்கப்படும்

## செயலாளர் இளங்கோவன் தெரிவிப்பு

கல்வி அமைச்சினால் நடத்தப்பட்ட அழகியற் பாட ஆசிரியர் நியமனத்திற்கான நேர் முகப் பரீட்சையின் முடிவுகள் வடக்கு மாகாணக் கல்வி அமைச்சிற்கு கிடைக்கவில்லை.

முடிபுகள் கிடைத்தவுடன் அழகியற் பாட ஆசிரியர் நியமனம் வழங்கப்படுமென வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கல்வி அமைச்சினால் நடத்தப்பட்ட அழகியற் பாட ஆசிரியர்களுக்கான போட்டிப்பரீட்சையில் சித்திபெற்றவர்களுக்கு நேர்முகப் பரீட்சையின் பின்னர் ஆசிரியர் நியமனம் வழங்கப்பட்டுள்ளதாகவும், மேலும் போட்டிப் பரீட்சைக்கு தோற்றிய அனைவருக்கும் இரண்டாம் கட்டமாக நேர்முகப் பரீட்சை நடத்தப்பட்டு நியமனம் வழங்கப்படவுள்ளதாகவும் கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தனா கடந்த வியாழக்கிழமை நாடாளுமன்றில் நடைபெற்ற கல்வி மாநாட்டில் தெரிவித்தார்.

இந்நிலையிலேயே வடக்கு மாகாணத்தில் அழகியற் பாட ஆசிரியர் நியமனத்திற்கான நேர் முகப்பரீட்சைக்கு தோற்றியவர்களுக்கு நியமனம் வழங்கப்படவில்லை எனக் கேட்டபோதே வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

அழகியற் பாட ஆசிரியர் நியமனம் வழங்குவதற்கான போட்டிப் பரீட்சை, நேர்முகப் பரீட்சையை நடத்தி நியமனம் வழங்கப்படுவோரின் விபரத்தை வழங்குவதாக கல்வி அமைச்சு அறிவித்திருந்தது.

எனினும் நேர்முகப் பரீட்சை நடத்தப்பட்டு நியமனம் வழங்குவதற்கான விபரங்களை இதுவரை கல்வி அமைச்சு அனுப்பி வைக்கவில்லை.

கல்வி அமைச்சிடமிருந்து விபரங்கள் கிடைத்தவுடன் நியமனம் வழங்கப்படுமென வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன் தெரிவித்தார். (ந-5)

# பெண்ணின் கால் முறிந்தது

(சாவகச்சேரி)

இரண்டு தனியார் பஸ்கள் ஒன்றையொன்று முந்திச் செல்ல முற்பட்ட வேளை அவற்றுக்கு இடையில் துவிச்சக்கரவண்டியில் குறுக்கிட்ட பெண்ணொருவர் கால் முற்றாக பாதிக்கப்பட்ட நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் நேற்றுக் காலை 8மணியளவில் சாவகச்சேரி பஸ்நிலையத்திற்கு முன்பாக இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவத்தில் நுணாவில் மேற்கைச் சேர்ந்த பொன்னம்பலம் தர்ஷினி (வயது 23) என்பவரே கால் முற்றாக பாதிப்புற்ற நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

(ஸ்ரீ-6,29)

# விபத்தில் காயம்

(யாழ்ப்பாணம்)

மோட்டார் சைக்கிளில் பயணித்த வேளை நாய் குறுக்கிட்டதால் ஏற்பட்ட விபத்தில் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் நேற்று பிரான்பற்று தியான இல்லத்திற்கு முன்பாக இடம்பெற்றுள்ளது. இதில் மாதகல் கிழக்கைச் சேர்ந்த என்.மங்கலச் செல்வன் (வயது-55) என்பவரே படுகாயம் அடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். (ந-6)

# கழுத்துப் பட்டி வழங்கும் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் கந்தரோடை தமிழ் கந்தையா வித்தியாலய மாணவர்களுக்கான கழுத்துப் பட்டி வழங்கும் நிகழ்வு இன்று திங்கட்கிழமை காலை 8.30மணிக்கு அதிபர் கா.சசிதரன் தலைமையில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக உடுவில் கோட்டக்கல்விப் பணிப்பாளர் குபேரநாதன் கலந்து கொள்ளவுள்ளார். மேற்படி பாடசாலை மாணவர்களுக்கான 70ஆயிரம் ரூபா பெறுமதியான கழுத்துப் பட்டிகளை பாடசாலையில் பழைய மாணவி திருமதி ஸ்ரீகந்தராஜா தவராணி வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-31)

# இளைஞர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

கஸ்தூரியார் வீதியில் உள்ள மாதா கோவிலடியில் நேற்று பிற்பகல் 4.30 மணியளவில் இரண்டு மோட்டார் சைக்கிள்கள் நேருக்கு நேர் மோதியதில் இளைஞர்கள் இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

இச்சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த படுகாயமடைந்த இரு இளைஞர்களும் சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ந-6)


செல்லா சினிமா

பசங்க



தேசிய விருது பெற்ற படம்

காட்சி நேரம்:10.30,2.30,6.30



மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 29 07 1960

மறைவு 10 01 .2008

திருமதி குலசேகரம்-ஆனந்தி

மூன்றோ மூவாயிரம் ஆண்டோ-ஆயினும்
ஆறாது துயரம்மா! வற்றாது பாசமம்மா
ஊட்டியது அன்னத்தோடு அறிவம்மா
நீங்காது நெஞ்சை விட்டு உன் நினைவம்மா
உன் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திப்போம்.

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். கணவன், பிள்ளைகள்.

(3501)



# பதவி வெற்றிடம்



## விற்பனை மேம்படுத்தல் அதிகாரி& முகாமைத்துவ உதவியாளர்

எமது நிறுவனமான **"TOUCHWOOD INVESTMENTS PLC"** மட்டுமே இலங்கையில் மக்கள் மயப்படுத்தப்பட்ட வனத்துறை நிறுவனம். தெற்காசியாவிலே முதன் முதலாக ISO தரச்சான்றிதழ் பெற்ற நிறுவனமாகும். எமது நிறுவனம் கடந்த 11 வருடங்களாக தமது அபிவிருத்தி திட்டங்கள் மற்றும் செயற்பாடுகளை 08 நாடுகளுக்கு விரிவுபடுத்தியுள்ளது. தற்போது **யாழ்ப்பாணத்திலும்** எமது பணிகளை தொடரவுள்ளோம். இதனடிப்படையில் பின்வரும் பதவி வெற்றிடங்களுக்கு தகுதியானோரிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**விற்பனை மேம்படுத்தல் அதிகாரி** (ஆண்)
**Sales Executives** (Male)

- 24 வயதுக்கு மேற்பட்டவராக இருத்தல் வேண்டும்
- சிறந்த கல்விப்பின்னணி உள்ளவர்.
- தமிழ் மொழி மூலமான தொடர்பாடல் மற்றும் எழுத்தாற்றல் திறமை கட்டாயத்தகைமையாகும்.
- ஆங்கில அறிவு மேலதிக தகைமையாகக் கொள்ளப்படும்.
- சந்தைப்படுத்தல் துறையில் முன் அனுபவம் இருத்தல் மேலதிக தகைமையாகக் கொள்ளப்படும்.
- முற்போக்கு சிந்தனையும்,உற்சாகமாகச் செயற்படத்தக்கவராகவும் இருத்தல் வேண்டும்.
- குழுவாக செயற்படத்தக்கவராக இருக்க வேண்டும்.



**முகாமைத்துவ உதவியாளர் (ஆண், பெண்)**
**Administration Assistant** (Male & Female)

- 24 வயதுக்கு மேற்பட்டவராக இருத்தல் வேண்டும்.
- சிறந்த கல்விப்பின்னணி உள்ளவர்.
- அலுவலக நிர்வாகத்திறமை பற்றிய அறிவு.
- அடிப்படை கணக்கீட்டு அறிவு மேலதிக தகைமையாகக் கொள்ளப்படும்.
- அலுவலக பொறுப்புணர்ச்சியுடன் செயற்படவேண்டும்.
- குழுவாக செயற்படத்தக்கவராக இருக்க வேண்டும்.

நேர்முகத்தேர்வு நாளை 11ம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை 03 மணி முதல் 06 மணிவரை இல. 86/1, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் அமைந்துள்ள செரண்டிப் இன் (SERENDIV INN) விருந்தினர் விடுதியில் நடைபெறும்...

நேர்முகத் தேர்விற்கு தங்கள் சான்றிதழ்கள் மற்றும் சுயவிபரக்கோவையுடன் சமுகம் தரவும்

TOUCHWOOD

Tel.. no: 0777 569 615

www.touchwood.com

(கி-2129)

# இன்று ஒரு தகவல்

## உள்மன ஆற்றல்

தையல் ஊசியைக் கண்டு பிடிப்பதற்காக பலகாலம் தலையைப்பிய்த்துக் கொண்டு ஆராய்ச்சி பண்ணிக் கொண்டிருந்தார் ஹோ என்ற விஞ்ஞானி.

அவருக்குப் பிடிபடாமலிருந்த விடயம் என்வென்றால் அந்த ஊசியின் கூர்மையான பாகத்தில் நூலை எப்படிச் சேர்ப்பது என்பதுதான்.

மற்றைய பாகம் மெசினுக்குள்ளே போய்விடுகிறது. அதனால் அந்தப் பாகத்தில் சாதாரணமற்ற ஊசியில் செய்வது போல் நூலை நுழைக்க முடியாது. அப்படி நுழைத்தாலும் எப்படி தைப்பது?இதுதான் அவருக்கிருந்த பிரச்சினை.

நீண்டநாள் யோசித்தார். தையல் மெஷின் ஊசியின் வடிவமைப்பு அவருக்குப் புலப்படவில்லை. இரவு பகலாக அதே ஞாபகமாக இருந்தார். ஒருநாள் அவர் தூங்கிக் கொண்டிருந்தார்.

அப்பொழுது ஒரு கனவு கண்டார்.

அந்தக் கனவில் அவரை ஒரு மலைச்சாதியினர் பிடித்துக் கொண்டு போய் ஒரு இடத்தில் கட்டிப்போட்டு விடுகிறார்கள்.

அந்த மலைச்சாதி மக்களின் அரசன் ஒருத்தன் வருகின்றான். அவனைப் பார்த்து ஒரு உத்தரவிடுகிறான்.

என்ன உத்தரவு தெரியுமா?

பொழுது சாய்வதற்குள் நீ தையல் மெஷின் ஊசியைக் கண்டு பிடிக்க வேண்டும். அப்படிக் கண்டு பிடிக்கவில்லையானால் உன்னுடைய தலையை வெட்டிவிடுவோம்.

இதுதான் அரசன் போட்ட கட்டளை.

இவருக்கு என்ன செய்வதென்று ஒன்றுமே புரியவில்லை. திருதிருவென்று முழித்தார்.

இந்த நேரத்தில் அந்த மலைச்சாதியினர் அவரைச் சுற்றி சுற்றிவந்துபயங்கரமாக முழித்துக்கொண்டுநடனமாடுகிறார்கள்.

தன்னைச் சுற்றிச் சுற்றி ஆடிக்கொண்டுவரும் அவர்களை இவர் திகிலுடன் பார்க்கிறார். நேரம் ஆக ஆக தன்னுடைய இறுதி நேரம் நெருங்குவதை உணர்ந்தார். மிகவும் நெருக்கடியான நிலைமை. தன்னைச் சுற்றிச் சுற்றி ஆடுபவர்களைக் கவனித்தார். அவர்களுடைய கைகளில் ஈட்டிபோன்று ஓர் ஆயுதம் வைத்திருந்தார்கள். அந்த ஆயுதத்தை இவருடைய கண்ணுக்கு நேராகக் கொண்டு வந்தார்கள். அதை அவர் பார்த்தார். அந்த ஆயுதத்தின் கூரான முனையை இவர் கூர்ந்து கவனித்தார்.

அந்தக் கூரான ம்முனையில் ஒரு சின்ன துவாரம் தெரிந்தது. உடனே அவருக்குப் பளிச்சென்று ஒரு ஐடியா வந்தது. இதைத் தானே இவளவு காலமும் நான் தேடிக் கொண்டிருந்தேன். கூரான முனையில் ஒரு சின்ன துவாரத்தைப் போட்டு விட்டால். அதன்மூலமாக நூலைச் செலுத்தி மறுமுனையை மெஷி னில் வைத்துவிடலாமே. தையல் மெஷின் ஊசி ரெடி என்று நினைத்தார்.

திடீரென்று தூக்கம் கலைந்த உடனே தன் தலைமாட்டில் இருந்த குறிப்பேட்டில் இதைக் குறித்து வைத்துக் கொண்டார். அதன்பின் அந்த ஊசியையும் அவர் செய்து முடித்தார். இது எப்படியென்று நீங்கள் நினைக்கலாம். ஆனால் இது சாத்தியம்தான்.

முழித்துக் கொண்டிருக்கும் போது நமக்கு ஏற்படும் சில பிரச்சினைகளுக்குக் கனவில் விடைகிடைப்பதுண்டு. உங்களில் பலருக்கு இப்படியான அனுபவம் ஏற்பட்டிருக்கலாம். எந்த ஒரு செயலைப்பற்றி நினைக்கும் போதும் அந்தந்தச் செயல் நம்முடைய நினைவில் ஒரு நல்ல வடிவம் பெறுகிறது. ஒரு செயற்றிட்டத்தை எந்தளவுக்கு நாம் நன்றாக யோசனை செய்து திட்டம் போடுகிறோமோ அந்த அளவுக்கு அதை சுலபமாக செய்து முடிக்கமுடியும். அந்த விஞ்ஞானி நினைத்த காரியம் அவருடைய எண் ணம் முழுவதும் ஆக்கிரமித்தது. அதனால் அவர் நினை த்தது கனவில் உருவாகி அதற்கு செயல் வடிவம் கிடைத்தது.

மனிதனின் உள்மனதுக்கு அவ்வளவு ஆற்றல் உண்டு என்று சொல்கிறார். தூக்கத்தை அக்கபூர்வமாக உபயோகப் படுத்துவதெப்படி? என்பதைப் பற்றியெல்லாம் இப்பொழுது நிறைய ஆராய்ச்சி செய்கிறார்கள். பயிற்சியெல்லாம் கொடுக்கிறார்கள். அதனால் தூக்கத்தைப் பற்றி இலேசாக நினைத்துவிடாதீர்கள்.

நமக்கு வேண்டப்பட்ட ஒருத்தருக்கு தூக்கத்தில் நடக்கின்ற வியாதி இருந்தது. அதற்காக மருந்து எடுத்துக் கொண்டிருந்தார்.

ஒரு நாள் அவரைப் பார்த்துக் கேட்டேன்.

‘‘ஏங்க.... தூக்கத்தில் நடக்கிற வியாதிக்கு மருந்து உள்ளெடுக்குறீங்களே ... ஏதாவது முன்னேற்றம் தெரியுதா?’’ என்று கேட்டேன்.

“தெரியுது” என்றார்.

“எப்படி” என்றேன்.

முன்பெல்லாம் தூக்கத்தில் 10 அடிவரைக்கும் நடப்பேன். இப்பொழுது 40 அடிவரைக்கும் நடக்கிறேன் என்றார்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

## க.பொ.த உயர்தரத்தில் புதிதாக தொழில்நுட்ப பிரிவை ஆரம்பிக்க திட்டம்

(கொழும்பு)

கல்விப் பொதுதராதர உயர்தரப் பிரிவில் தற்போது கலை, வர்த்தகம், உயிரியல் ஆகிய பிரிவுகள் இருப்பதுபோல் எதிர்காலத்தில் தொழில்நுட்ப பிரிவைத் தொடங்கவும் நடவடிக்கைகள் எடுக்கப் பட்டுள்ளன.

இளைஞர் வலுவூட்டல் அமைச்சின் வேண்டுகோளை கருத்திற் கொண்டு கல்வி அமைச்சு இந்த முடிவை எடுத்துள்ளது.

சம்பந்தப்பட்ட இரு அமைச்சர்களும் தமது அமைச்சு அதிகாரிகள் சகிதம் சந்தித்துப் பேசியபின் இந்த முடிவுக்கு வந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கல்விப் பொது சாதாரணதர மற்றும் உயர்தரப் பரீட்சைகளுக்குத் தோற்றியபின் 3இலட்சத்துக்கும் அதிக மானவர்கள் தங்களது கல்வி நடவடிக்கைகளைக் கைவிடுகின்றனர்.

இவர்களை தொழில் துறைகளில் இணைத்துக் கொள்ளத்தக்கதாகவே இந்தத் திட்டம் முன்வைக்கப்பட்டுள்ளது. வருடாந்தம் சுமார் 3 இலட் சத்து 30 ஆயிரம் சிறுவர் சிறுமியர் ஆண்டு ஒன்றில் சேர்க்கப் படுகின்றனர்.

இதில் 21 ஆயிரம் பேர் மட்டுமே பல்கலைக்கழகம் செல்கின்றனர். இது வெறும் ஆறு சத வீதம் மட்டுமே. இன்னும் 16 வீத மானவர்கள் தொழில்நுட்பம் சார்ந்த துறைகளைத் தெரிவு செய்கின்றனர்.

இவ்வாறு தொழில்நுட்பத்துறைகளைத் தெரிவு செய்பவர்களின் எண்ணிக்கையை அடுத்த சில ஆண்டுகளில் 40 வீதமாக அதிகரிப்பதே தனது நோக்கமாகும் என்று இளைஞர் விவகார அமைச்சர் டளஸ் அழகப் பெரும தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

## புதிய நிர்வாகசபை தெரிவு

உடுவில் தெற்கு நிலா சனசமூக நிலையத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் கடந்த 5 ஆம் திகதி தலைவர் வி.எஸ். இராசதுரை தலைமையில் நடைபெற்றது.

பொதுசபையின் கலந்துரையாடலின் பின் புதிய செயற்குழு தெரிவு நடைபெற்றது.

இதில் தலைவராக ந.இராமேஸ்வரன், உப தலைவராக ச.பத்மாசலம், செயலாளராக ச.பத்மநாதன், உப செயலாளராக அ.அருண்நாதன், பொருளாளராக செல்வி. க.தேனுகாவும், நிர்வாக உறுப்பினர்களாக திருமதி. து.பத்மாவதி, திருமதி. க.நேசமலர், எஸ் சந்திரகாந்தன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

(ஸ்ரீ-3)

## ஆட்பதிவுத் திணைக்களத்தால் புதிய சேவை அறிமுகம்

தேசிய அடையாள அட்டையைப் பெறுவதற்காக விண்ணப்பித்து விட்டு காத்திருப்பவர்களுக்கு அவற்றை பெறுவது உள்ளிட்ட முக்கிய தகவல்களை கையடக்கத் தொலைபேசிகளில் குறுஞ் செய்திகளாகப் பெற்றுக்கொள்ளும் முறையை அறிமுகம் செய்ய திட்டமிட்டுள்ளதாக ஆட்பதிவு திணைக்களம் தெரிவித்துள்ளது.

திணைக்களத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் ஜகத்.பீ விஜேவீர இந்தத் தகவலைத் தெரிவித்துள்ளார்.

இந்தப் புதிய சேவை எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன்னர் அறிமுகம் செய்ய எதிர்பார்த்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இவ்வாறு தகவல்களைப் பெற்றுக்கொள்ள RPD இடைவெளி STS இடைவெளி விண்ணப்ப இலக்கம் என்பவற்றை குறிப்பிட்டு 1919 இலக்கங்களுக்கு குறுஞ் செய்திகளை அனுப்புவதன் மூலம் தமது தேவையான தகவல்களை பெற்றுக்கொள்ள முடியும் எனவும் முகாமைத்துவ பணிப்பாளர் ஜகத் பீ. விஜேவீர குறிப்பிட்டார். (ஸ்ரீ-2)

## குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 140 | 100 | 160 | 250 |
| உருளைக்கிழங்கு | 60 | 60 | 70 | 60 |
| பச்சைமிளகாய் | 180 | 160 | 220 | 220 |
| தக்காளி | 60 | 70 | 90 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 40 | 40 | 40 |
| கோவா | 55 | 80 | 90 | 80 |
| கரட் | 70 | 80 | 120 | 110 |
| பூசணி | 20 | 40 | 40 | 40 |
| புடோல் | 70 | 90 | 100 | 100 |
| வாழைக்காய் | 40 | 40 | 50 | 50 |
| சின்ன வெங்காயம் | 200 | 240 | 240 | 240 |
| பெரிய வெங்காயம் | 140 | 150 | 150 | 180 |
| பாகற்காய் | 100 | 160 | 160 | 150 |
| வெண்டிக்காய் | 60 | 70 | 90 | 70 |
| கருணைக் கிழங்கு | 35 | 50 | 60 | 50 |
| பயற்றங்காய் | 100 | 200 | 200 | 190 |
| லீக்ஸ் | 100 | 120 | 140 | 140 |
| பீற்றூட் | - | 150 | 160 | 140 |
| கறிமிளகாய் | - | 250 | 250 | 230 |
| முருங்கைக்காய் | - | - | - | - |
| போஞ்சி | 120 | 140 | 160 | 140 |
| கத்தரிதம்புள்ள | 100 | 80 | 150 | 100 |
| கீரை - 1 பிடி | 20 | 30 | 40 | 35 |
| தேசிக்காய் | 40 | 80 | 80 | 90 |
| தேங்காய் (ஒன்று) | 35-40 | 40 | 50 | 45 |

## இராசி பலன்

*10.01.2011*

*(மார்கழி 26, திங்கட்கிழமை)*

*சூரிய உதயம் முற்பகல் 6.25 மணிக்கு*

*சஷ்டி பின்னிரவு 12.26மணிவரை*

*பூரட்டாதி பிற்பகல் 2.56 மணி வரை*

*இராகுகாலம் 8.03-9.33 மணிவரை*

*சுபநேரம் 12.33-2.03மணிவரை*

*சஷ்டி விரதம்*

**மேடம்** சொன்ன சொல்லைக் காப்பாற்ற துணிவுடன் செயற்படுவீர்கள், சுப செலவுகள் அதிகரிக்கும், தொழிலில் புதிய மாற்றங்கள் செய்யும் எண்ணம் உருவாகும்.

**இடபம்** புதிய நண்பர்களின் அறிமுகத்தால் பொருளாதார நிலை உயரலாம்,பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, கௌரவமான சூழ்நிலை அமையும்.

**மிதுனம்** வருமானம் உழைக்கும் வழியைக் கண்டு கொள்வீர்கள், தந்தை வழியில் ஏற்பட்ட தகராறுகள் அகலும், அரச சலுகைகள் வந்து சேரலாம்.

**கடகம்** ஆன்மீக நாட்டம் அதிகரிக்கும், கொடுத்த வாக்கை காப்பாற்றும் எண்ணம் மேலோங்கும், புகழ் மிக்கவர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

**சிங்கம்** காரிய வெற்றிக்கு கடவுளை வழிபட வேண்டியநாள், செலவுகள் தவிர்க்க முடியாமல் போகலாம், வாகனங்களில் செல்வோர் விழிப்புணர்வுடன் நடந்து கொள்வது அவசியம்.

**கன்னி** பெண்களின் சுபகாரியப் பேச்சுக்கள் முடிவாகும், நட்பு வட்டம் விரிவடையும், மாலை நேரப் பயணத்தால் பிரபலமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

**துலாம்** வியாபார மேம்பாட்டிற்கு பாடுபடுவீர்கள், தெய்வீக சிந்தனை மேலோங்கும், மறைமுக எதிர்ப்புகள் குறையும், சுவாரஸ்யமான நாள், பணவரவு திருப்தி தரும்.

**விருச்சிகம்** தொழில் வளர்ச்சிக்கு எடுத்த முயற்சி வெற்றி பெறும், பிள்ளைகள் வழியில் பெருமையடைய வேண்டிய நாள், பூர்வீக சொத்துக்களால் நன்மையுண்டு.

**தனுசு** உற்சாகத்துடன் பணிபுரிவீர்கள், புதிய சிந்தனைகள் உருவாகும், எதிர்ப்பாக இருந்தவர்கள் விலகுவர், பெற்றோர் மீது பாசம் அதிகரிக்கும்.

**மகரம்** நண்பர்களைச் சந்திக்கும் வாய்ப்புண்டு, சகோதரர் ஒத்துழைப்பால் உற்சாகம் பெறுவீர்கள், தொழிலில் எதிர்பார்த்த முன்னேற்றம் கிடைக்கலாம்.

**கும்பம்** எதிர்பார்ப்புக்கள் எளிதில் நிறைவேறும், இல்லத்தில் சுப நிகழ்வுகள் இடம் பெறுவதற்கான அறிகுறி தோன்றும், வாக்கு மேன்மையுண்டு.

**மீனம்** மனக்குழப்பம் அகல கடவுளை வழிபட வேண்டிய நாள், திடீர் பயணத்தால் திசைதிருப்பம் ஏற்படலாம், ஆரோக்கியத்தில் அக்கறை காட்டுவீர்கள்.

வளவன்



சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியின் 86 ஆவது பிறந்த தினமும் அறக்கொடை விழாவும் தெல்லிப்பளை ஸ்ரீ துர்க்காதேவி ஆலய அன்னபூரணி மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் இறைசெம்மல் தொண்டுநாதன் உரையாற்றுவதையும் வைத்தியகலாநிதி திருமதி ஜெயதேவி கணேசபிள்ளை, இசைக் கலைமாணி சங்கீதபூஷணம் திருமதி தர்மபூபதி சிதம்பரநாதனுக்கும் தங்கம்மா அப்பாக்குட்டியின் சகோதரி பண்டிதை பொன் பாக்கியத்துக்கும் சிவத்தமிழ் விருதை வழங்கிக் கௌரவிப்பதையும் அருகில் செஞ்சொற்செல்வர் ஆறு திருமுருகன் நிற்பதையும் படங்களில் காணலாம்.

# சைக்கிள்களை தொலைத்தோரை தொடர்பு கொள்ளக் கோரிக்கை

(கரவெட்டி)

வடமராட்சியில் அண்மையில் துவிச் சக்கரவண்டி திருடர்கள் கைதானமையை யடுத்து அவர்களிடமிருந்து 19 துவிச்சக் கரண்டிகள் நெல்லியடி பொலிஸாரால் கைப் பற்றப்பட்டுள்ளன.

மேற்படி ஐந்து சந்தேக நபர்களிடம் இருந்து மீட்கப்பட்ட துவிச்சக்கரவண்டிகள் நெல்லியடிப் பொலிஸ் நிலையத்தில் பாரப் படுத்தப்பட்டுள்ளன.

எனவே வடமராட்சி பிரதேசத்தில் தமது துவிச்சக்கரவண்டிகளை களவு கொடுத்த துவிச்சக்கரவண்டி உரிமையாளர்கள் தமது துவிச்சக்கரவண்டிகளை அடையாளம் காட்டு மாறு பொலிஸார் கேட்டுள்ளனர்.

(ஸ்ரீ-3-24)

# குற்றச் செயல்களை கட்டுப்படுத்த இளைஞர்கள் முன்வரவேண்டும்

## சமய சமூகப் பெரியார்கள் வேண்டுகோள்

(கரவெட்டி)

வடமராட்சி பகுதியில் இடம்பெறும் குற்றச் செயல்களை கட்டுப்படுத்துவதற்கு இளைஞர் தரப்பினர் மற்றும் சமூக உணர்வாளர்கள் முன்வரவேண்டும் என்று அப்பகுதி சமய சமூகப் பெரியார்கள் வேண்டுகோள் விடுத் துள்ளனர்.அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

இன்று வடமராட்சிப் பிரதேசம் குற்றச் செயல் இடம்பெறும் பிரதேசமாக மாறி வருகின்றது.

போர் முடிவுற்ற பின் அதிகளவான இளம் சமூகங்கள் தமது உணர்வுகளை மாற்றிய மைத்துள்ளனர்.

இதனால் அதிகமான குற்றச் செயல்கள், கலாசார சீரழிவுகள் என்பன தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றன.

தத்தமது கிராமங்களில் இடம்பெறும் கலாசாரச் சீரழிவுகள் மற்றும் ஏனைய குற்றச் செயல்களை உடன் கட்டுப்படுத்த இளைஞர் தரப்பினாலேயே முடியும்.

அதைச் சட்டப்படி, சரியானமுறைப்படி தடுத்து குற்றச் செயலைக் கட்டுப்படுத்த இளைஞர் தரப்பு முன்வர வேண்டும் என்று அவர்கள் குறிப்பிட்டனர்.

(ஸ்ரீ-3-24)

# ஒப்பந்தகாரர்களின் வேலையாட்களுக்கும் மேற்பார்வையாளர்களுக்குமிடையில் தர்க்கம்

## வீதி புனரமைப்பு வேலைகள் இடைநிறுத்தம்

(அல்வாய்)

யாழ். பருத்தித்துறை வீதி அகலிப்பு வேலைகளில் ஈடுபட்டிருந்த ஒப்பந்தக்காரர் களின் வேலையாட்களுக்கும் வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் மேற்பார்வையாளர்க ளுக்கும் இடையே நேற்று முன்தினம் பிற் பகல் 3மணியளவில் ஏற்பட்ட வாக்குவாதத் தினால் இவ் வேலையாட்கள் வேலையை இடைநிறுத்திவிட்டு வீடு திரும்பினர்.

சம்பவ தினத்தன்று உருக்கப்பட்ட தாரப் பீப்பாக்களை அவ்விடத்திலேயே விட்டுச் சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதற்கு முன்னர் மழையையும் பாராது இரவு பகலாக வேலை செய்த இவர்களுடன் தர்க்கத்தில் ஈடுபட்டமை காரணமாகவே இவ்வேலையினை இடைநிறுத்தியுள்ளனர்.

இதேவேளை நேற்று வந்த தொழிலா ளர்கள் அயல்வீடுகளில் பாதுகாப்பாக வைத் திருந்த வீதி வேலை செய்யும் ஆயுதங்களை யும் மின்சார பிறப்பாக்கியையும் எடுத்துச் சென்றுள்ளனர்.

அவ்வீதி அருகே உள்ள பொதுமக்கள் அரைகுறையாக உள்ள இவ்வீதியைப் பார்த்து விசனம் தெரிவிப்பதோடு இவ்வீதியைப் புனரமைப்புச் செய்யும் சம்பந்தப்பட்ட அதி காரிகள் இப் பணியாளர்களுடன் சமரசம் செய்துவீதியைப் புனரமைப்புச் செய்து தருமாறு கேட்டுள்ளனர்.

(ஸ்ரீ-3-19)




# யாழ்ப்பாண சர்வதேச வர்த்தகச் சந்தை

(கொழும்புத்துறை)

யாழ்ப்பாண சர்வதேச வர்த்தகச் சந்தை எதிர்வரும் 21,22,23ஆகிய மூன்று தினங் களில் சுப்பிரமணியம் பூங்காவிற்கு முன்பாக வுள்ள யாழ்.மாநகர சபை வளாகத்தில் காலை 10மணி தொடக்கம் பிற்பகல் 7 மணிவரை நடைபெறவுள்ளது.

இதில் கைத்தொழில் கருத்தரங்குகள், முதலீட்டு அரங்கம், உயர்கல்வி மற்றும் தொழில் வழிகாட்டல்களும் விசேட உணவு கள்,குடிபானங்கள், வீட்டுக்குத் தேவையான அனைத்து உபகரணங்களும் கட்டிடப் பொருட்களும் காட்சிக்கு வைக்கப்படவுள் ளன. இந்நிகழ்வில் இசைநிகழ்வுகள் இடம் பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ஸ்ரீ-3-5)

# பருத்தித்துறை லீக் அணிக்கு ஜனாதிபதி பாராட்டு

(கரவெட்டி)

இலங்கை உதைபந்தாட்ட சம்மேள னத்தில் அங்கம் வகிக்கும் 45 லீக் அணி க஌ுக்கிடையில் நடைபெற்று வந்த உதை பந்தாட்ட இறுதிப் போட்டிக்கு யாழ். மாவட்டத் திலிருந்து முதற் தடவையாக பருத்தித்துறை லீக் அணி தெரிவானது.

இதனால் கடந்த வெள்ளிக்கிழமை பருத் தித்துறை உதைபந்தாட்ட லீக் அணியினர் கொழும்புக்குச் சென்றிருந்தமை குறிப்பிடத் தக்கது.

பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறு கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தாவின் வாசஸ் தலத்தில் நேற்றுமுன்தினம் பருத்தித்துறை லீக் உதைபந்தாட்ட அணியினரை சந்தித்த மஹிந்த ராஜபக்ஷ லீக் அணியினரை பாராட் டியதுடன் லீக் அணியின் போக்குவரத்து செலவிற்கென ஒரு இலட்சத்து 36ஆயிரம் ரூபா காசோலையை லீக்தலைவர் டி.எம். வேதாபரணம், செயலாளர் ரி.வரதராஜன் ஆகி யோரிடம் கையளித்துள்ளார்.

(ஸ்ரீ-3-24)

# பருத்தித்துறை இ.போ.ச. சாலையில் ஆளணிப் பற்றாக்குறை

(பருத்தித்துறை)

பருத்தித்துறை இ.போ.ச.சாலையில் ஆளணிப் பற்றாக்குறை நிலவி வருகின்றது. இங்கு சாரதிகள் மற்றும் நடத்துநர்களுக்கு பற்றாக்குறை நிலவுவதாக இச்சாலை வட்டா ரங்கள் தெரிவித்துள்ளன.

இப்பற்றாக்குறை காரணமாக இச் சாலை யில் இருந்து மேலதிக பஸ் சேவைகளை நடத்த முடியாதுள்ளதுடன் இச்சாலைக்கு உடனடியாக 10 நடத்துநர்களும் 5 சாரதிக ளும் தேவைப்படுவதாகவும் மேலும் தெரி விக்கப்பட்டுள்ளது.

இச் சாலையில் இருந்து நடாத்தப்படும் பஸ் சேவைகளில் சில சாரதிகள் நடத்துநர் களாகவும் சேவையாற்றி வருவதுடன் போதி யளவு பஸ் சேவைகள் நடைபெறாததால் பயணிகள் பலத்த நெரிசலின் மத்தியில் பஸ்ஸில் பயணம் செய்வதாகத் தெரிவிக் கின்றனர்.

அதேவேளை 10 பஸ் வண்டிகளுக்கு வேண்டிய உதிரிப்பாகங்கள் இல்லாததால் அந்த பஸ்கள் சேவையில் ஈடுபடுத்த முடி யாதிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

எனவே பஸ்சேவை சீரடைய உரிய அதிகா ரிகள் கவனமெடுப்பார்களா என பயணிகள் தெரிவிக்கின்றனர்.

(ஸ்ரீ-3-10)

# பச்சிலைப்பள்ளி பிரதேசசபைக்குட்பட்ட 25 வீதிகள் புனரமைக்கப்படவுள்ளன

(பருத்தித்துறை)

பச்சிலைப்பள்ளி பிரதேச சபை தமது பிரிவிற்கு உட்பட்ட 25 வீதிகளை நெல்சிப் திட்டத்தின் கீழ் புனரமைக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருப்பதாக பச்சிலைப்பள்ளி பிர தேச சபை செயலாளர் எஸ்.சிவப்பிரகாசம் தெரிவித்துள்ளார்.

இப் பகுதியில் ஏற்பட்ட யுத்த நடவடிக்கை யையடுத்து அழிந்துபோன வீதிகளே புனர மைக்கப்படவுள்ளன.

மேற்குறித்த வீதிகளைத் திருத்துவதற்கு 75 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. இவ்வீதிகளைத் திருத்த இம்மாத நடுப்பகுதி யில் கேள்வி அறிவித்தல் கோரப்பட்டுள்ள தாகவும் செயலாளர் மேலும் தெரிவித்துள் ளார்.

(ஸ்ரீ-3-10)

# பருத்தித்துறை நீதிமன்றம் 6½கோடி செலவில் புனரமைப்பு

(பருத்தித்துறை)

பருத்தித்துறை நீதிமன்றம் புனரமைப்பு செய்யப்பட்டு வருகின்றது.

யுத்தம் காரணமாக சேதமடைந்த இந் நீதிமன்றம் 6 1/2 கோடி ரூபா செலவில் தற் போது புனரமைக்கப்பட்டு வருகின்றது.

இப் புனரமைப்பு வேலைக்கென நீதிய மைச்சு இந்நிதியை வழங்கியுள்ளது. இந் நீதிமன்றம் 25 வருடங்களுக்கு மேலாக இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் இருந் துள்ளது.

தற்போது இப்புனரமைப்பு வேலைகள் துரிதமடைந்து வருகிறது. பருத்தித்துறை நீதிமன்றம் உடுப்பிட்டி மாலுசந்தி வீதியில் தற்காலிகமாக இயங்கி வருகின்றமை குறிப் பிடத்தக்கது.

(ஸ்ரீ-3-10)

# தமிழ் மக்களுக்கு நேர்ந்த துன்பங்களை அனைவரும் ஏற்றுக்கொள்ள வேண்டும்

## நல்லிணக்க ஆணைக்குழுவில் மன்னார் ஆயர் தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழ் மக்களுக்கு நேர்ந்த துன்பங்களை முதன் முதலில் அனைவரும் ஏற்றுக் கொள்ள வேண்டும் என மன்னாரில் நேற்று முன்தினம் இடம் பெற்ற நல்லிணக்க ஆணைக்குழுவில் சாட்சியமளித்த மன்னார் மறைமாவட்ட ஆயர் இராயப்பு யோசப் ஆண்டகை தெரிவித்தார்.

இவர் தொடர்ந்து சாட்சியமளிக்கையில்,

இந்த நாட்டின் தமிழ் மக்கள் பட்டதுன்பங்கள் அவர்களுக்கு எதிராக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மனிதாபிமான நடவடிக்கைகளுக்கு எதிராக செய்யப்பட்ட காரியங்கள் ஆகியவற்றை சம்பந்தப்பட்டவர்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும். குறிப்பாக மக்கள் காணாமல் போன விடயம் ,சட்டத்திற்கு மாறாக மக்கள் கொல்லப்பட்ட விடயங்கள், சட்டத்திற்கு முன்னால் மக்கள் குற்றவாளிகள் என அறியப்பட்டவர்கள், வேறுவிதமாக பிடிக்கப்பட்டு கொல்லப்பட்ட விடயங்கள், தமிழ் மக்களை கொண்டு போய் சித்திரவதை செய்தவை, மக்கள் வாழும் இடங்களில் குண்டுகளைப் போட்டு கொன்றமை, கட்டடங்கள் , மருத்துவமனை போன்றவற்றை அழித்தொழித்த உண்மைகளை சம்பந்தப்பட்டவர்கள் கண்டு சொல்ல வேண்டும் என மன்னார் ஆயர் ஆணைக் குழு முன்னிலையில் சாட்சியமளித்தார்.

உண்மைகளை மறைப்பதினால் எவ்வித மான பயனும் இல்லை. உண்மைகளை எடுத்து அவை மக்கள் முன்னால் பகிரங்கமாக ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும். யார் இதை செய்தார்கள் என்ற உண்மை வெளிப்படுத்தப்படும் போதே மக்கள் மத்தியில் உண்மையான ஒப்புரவு ஏற்படுவதோடு சமரசம் செய்ய முடியும். இலங்கையில் உள்ள தமிழ் மக்கள் மத்தியில் உண்மையாக எல்லா மக்களோடும் சேர்ந்து வாழ வேண்டும். இதற்காக உண்மையான அரசியலமைப்பு மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் அவர் மேலும் சுட்டிக் காட்டியமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)

## திடப்படுத்தல் வழிபாடு

கிளிநொச்சி அமெரிக்கன் சிலோன் மிஷன் திருச்சபையின் கிறிஸ்து அரசர் ஆலயத்தில் திடப்படுத்தல் வழிபாடு திருச் சபைத் தலைவர் அ.ஜெயக்குமாரன் அடிகளாரினால் அண்மையில் நடாத்தப்பட்டது.

இவ்வழிபாட்டை சபைக்குரு அருட்திரு டி.எஸ்.மதியாபரணம் நடத்த பிராந்திய குரு முதல்வர் அருட்திரு டி.எஸ்.குகனேஸ்வரன் தலைமை தாங்கினார்.

கிளிநொச்சி, முறிகண்டி, பாரதிபுரம், முறிப்பு, விசுவமடு ஆகிய சபைகளைச் சேர்ந்த 40 பேர் திடப்படுத்தல் பெற்று சபைகளில் இணைந்து கொண்டார்கள். (ஸ்ரீ-3)

## சார்ஜாவில் 44 இலங்கையர்கள் நிர்க்கதியாகியுள்ளனர்

ஆப்கானிஸ்தானில் தொழில் பெற்றுத் தருவதாக அழைத்துச் செல்லப்பட்ட இலங்கையர்கள் 44 பேர் சார்ஜாவில் நிர்க்கதி நிலைக்குள்ளாகியுள்ளதாக கூறப்படுகிறது.

இவர்களை மீட்டு வருவதற்கு நடவடிக்கை எடுப்பதாக டுபாயில் உள்ள இலங்கைத் தூதரக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (ஸ்ரீ-2)

## உள்ளூராட்சி தேர்தலில் தனித்து போட்டியிட த.தே.கூ. தீர்மானம்

(கொழும்பு)

உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் தொடர்பாக தமிழ் தேசியக் கூட்டமைப்பின் விசேட கலந்துரையாடல் நேற்று முன்தினம் காலை 10 மணிக்கு வவுனியா நகர சபை மண்டபத்தில் நடைபெற்றது.

இக்கலந்துரையாடலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராஜா, சுரேஸ் பிரேமச்சந்திரன், செல்வம் அடைக்கலநாதன், சிவசக்தி ஆனந்தன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதன் போது தற்போதைய நிலையில் தமிழர்களுக்கு அவசியமாக தேவைப்படுகின்ற முக்கிய விடயம் என்ன, யாழ்ப்பாண மக்களின் அச்ச நிலைக்கான காரணங்கள் தொடர்பிலும் அவற்றுக்கான தீர்வுகள் தொடர்பில் அணுக வேண்டிய விடயங்கள் குறித்தும் தற்போதுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பிலும் விரிவாக கலந்துரையாடப்பட்டது.

இதன் மூலம் தமிழ் தேசியக் கூட்டமைப்பு தனியாகவே உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களில் போட்டியிட தீர்மானித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஸ்ரீ-7)

## அம்பாறையில் பாடசாலை மாணவன் காணாமல் போயுள்ளதாக முறைப்பாடு

(கொழும்பு)

அம்பாறை மாவட்டத்தின் திருக்கோவில் பிரதேசத்தின் விநாயகபரம் பகுதியில் 15 வயது பாடசாலை மாணவன் ஒருவர் கடந்த 2ஆம் திகதி மாலை முதல் காணாமல் போயுள்ளதாக உறவினர்களிடமிருந்து முறைப்பாடு கிடைக்கப்பெற்றுள்ளதாக திருக்கோவில் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தம்பிலுவில் மத்திய மகாவித்தியாலத்தில் கல்வி கற்கும் விநாயகபுரம் காயத்திரி கிராமத்தைச் சேர்ந்த 15 வயதான ஜெயசீலன் ஜெகன் என்ற மாணவனே காணாமல் போனவராவர்.

கடந்த 2ஆம்திகதி மாலை 3.30 மணிக்கு பாடசாலையை துப்புரவு செய்யவென வீட்டை விட்டு சென்றவர் வீடு திரும்பாததையடுத்து 4ஆம்திகதி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மேலதிக புலன் விசாரணைகளை திருக்கோவில் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஸ்ரீ-2)

## பிறந்தநாள் நினைவஞ்சலி

மண்ணில்: 10.01.1966

விண்ணில்: 01.01.2008

### விண்ணிலுள்ள அப்பாவிற்கு விருப்புடன் நாமனுப்பும் பிறந்தநாள் வாழ்த்து மடல்

பரிவான கடிதமும்
அகவை நாற்பத்தைந்தில்
அடியெடுத்து வைக்கின்ற
அன்பான அப்பாவுக்கு
ஆசை முத்தங்களும்
பிறந்த நாள் வாழ்த்துக்களும்
அப்பா இன்றுகாலை
உங்களைத் தேடினோம்
எங்குமே நீங்களில்லை!
எங்களுக்குள் இருப்பதையும்
பின்னர்தான் புரிந்தோம்!
உங்கள் நினைவுகளாக
எம்மோடு இருந்தாலும்
விண்ணிலேதான் உங்களின்
வசிப்பிடமே!
எங்களை தூக்கி வைத்து
முத்தம் தருவீர்களே!
எங்களின் வளர்ச்சியிலே
ஏணிப் படியாக இருந்தவரே!
எங்களின் கல்வியில்
நாங்கள் கவனமாயுள்ளோம்
உங்கள் கனவுகள்
நனவாகி வருகின்றன!
அம்மாவின் அரவணைப்பில்
குறையேதும் இல்லையப்பா!
உங்கள் பாதைகளில்தான்
அம்மாவும் பயணிக்கின்றார்!
மிகவும் பய பக்தியுடன்
உங்களுக்காக
மக்களும் எங்களோடுதான்

எத்தனை ஆலயங்கள்
எத்தனை கட்டிடங்கள்
எத்தனை பாடசாலைகள்
எத்தனை வீதிகள்
எத்தனை பொதுப் பணிகள்!
யாவிலும் உங்களைத்தான்
பார்க்கின்றோம் அப்பா!
அப்பா உங்களை
முத்தமிட எண்ணும் போதுதான்
நீங்கள் இல்லையென்பதை
உணர்ந்து பார்க்கிறோம்!
உங்கள் படத்தில்
தினமும் விழிக்கின்றோம்!
உங்கள் முகத்தில்
உதிரும் புன்னகைகள்
உங்கள் கரங்களினால்
ஆசீர்வதிக்கும் தன்மைகள்
இத்தனைக்கும் மத்தியில்
எங்களின் எதிர்காலம்
ஏற்றமுறும் நம்பிக்கை!
எல்லாமே உங்களால்தான்
யாவும் முடிந்த முடிவு
மீண்டும் வாழ்த்துக்களுடன்
கண்ணீர் சொரிய
விடைபெறும் உங்கள்

அன்பான பிள்ளைகள்
பவதாரணி
பிரணவன்
பவித்திரா



திரு.தியாகராசா மகேஸ்வரன்

276, பலாலிவீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்
தொலைபேசி:
021-2227559

இல.32, 36ஆவது ஒழுங்கை
கொழும்பு - 06
தொலைபேசி: 011-2360679

தகவல்:- விஜயகலா மகேஸ்வரன், பிள்ளைகள், குடும்பத்தினர்

(முன்னாள் இந்து கலாசார அமைச்சரும் யாழ்., கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும்)

# வெளிநாட்டில் படிக்க ஆர்வமா? விழிப்புடன் இருங்கள்



வெளிநாட்டில் கல்வி பயில வேண்டும் என்பது இன்றைய பெரும்பாலான இளைஞர்களின் கனவாக உள்ளது. அவ்வாறு விரும்பும் ஒரு வெளிநாட்டு பல்கலைக்கழகத்தில் படிப்பதற்கு செலவழிக்கும் பணம் மற்றும் காலம் ஆகியவற்றோடு, அந்த குறிப்பிட்ட பல்கலைக்கழகம் அந் நாட்டு அரசாங்கத்திடமிருந்து முறையான அங்கீகரிப்பையும் சான்றையும் பெற்றுள்ளதா என்று உறுதி செய்வது மிக மிக முக்கியமானது.

அதன்பொருட்டு பெறக்கூடிய பட்டத்தின் தரம் மற்றும் மதிப்பு பற்றி அளவிட இங்கே சில குறிப்புகள் தரப்பட்டுள்ளன. அவற்றைநினைவில்வைப்பது அவசியம்.

பரஸ்பர ஒப்பந்தம் நீங்கள் வெளிநாட்டில் படிப்பதற்கு தேர்வு செய்யும் ஒரு பல்கலைக்கழகம், இலங்கை பல்கலைக்கழங்களுடன், பட்டங்களை மதிப்பிடும் பொருட்டு இருதரப்பு ஒப்பந்தம் எதுவும் செய்துள்ளதா என்று பார்க்க வேண்டும். அப்படி நீங்கள் தேர்வு செய்யும் பல்கலைக்கழகம், இலங்கையின் புகழ்பெற்ற பல்கலைக்கழகங்களுடன் ஒப்பந்தம் வைத்திருந்தால் மிகவும் நல்லது.

**கல்வி நிறுவனத்தின் மதிப்பு**

நீங்கள் வாங்கும் பட்டத்தின் மதிப்பானது, அதைவாங்கும் பல்கலைக்கழகத்தின் பெயரையும் புகழையும் சார்ந்தது. ஒக்ஸ்போர்ட் மற்றும் ஹார்வர்ட் போன்ற உலகின் பெரும் புகழ்பெற்ற பல்கலைக்கழங்களின் பட்டங்கள் தனி மதிப்பை கொண்டவை. அந்தப் பல்கலைக்கழங்களுக்கு நம்பக சான்றுகள் தேவையில்லை.

**இசைவு ஒப்பந்தங்கள்**

போலோக்னா உடன்படிக்கையானது, ஐரோப்பிய நாடுகளின் கல்வி நிறுவனங்கள் வழங்கும் பட்டங்கள் அக்கண்டத்து நாடுகள் அனைத்திலும் செல்லுபடியாகும் வகையில் மேற்கொள்ளப்பட்டதாகவும் அந்த நாடுகள் அனைத்தும் இந்த உடன்படிக்கையின் உறுப்பினர்கள். அதே போன்ற வோஷிங்டன் உடன்படிக்கை யானது குறைந்தது எட்டு நாடுகள் தத்தமது கல்வி நிறுவனங்களின் பட்டங்களை பரஸ்பரம் ஏற்றுக்கொள்ளும்படி மேற் கொள்ளப் பட்டுள்ளது. அந்த நாடுகள் இந்த உடன் படிக்கையின் உறுப்பினர்கள். (வளரும்)

# நீங்கள் புத்திசாலி ஆக வேண்டுமா?

உலகில் எந்த ஒரு பொருளும் இயங்காமலோ அல்லது பயன்படுத்தப்படாமலோ இருந்தால், நிச்சயம் கெட்டுவிடும் அல்லது செயலற்றுவிடும்.

நாம் நமது உடம்பை ஆரோக்கியமாகவும், புத்துணர்ச்சியுடனும் வைத்துக்கொள்ள பலவிதமான பயிற்சிகளை மேற்கொள்கிறோம். சீரிய இயக்கத்தையும், முறையான ஓய்வையும் உடம்பிற்கு அளித்து, அதை சமச்சீர் நிலையில் வைத்துக்கொள்ள முயல்கிறோம். புத்திசாலி ஆக வேண்டுமெனில், உடம்பிற்கு கொடுக்கப்படும் இந்த முக்கியத்துவமானது, சிந்தனை மற்றும் பரிமாணத்தின் மையமாய் இருக்கும் மூளைக்கும் கொடுக்கப்பட வேண்டும்.

மூளைக்கு பயிற்சியே கொடுக்காமல் இருந்தால், அது ஆற்றல் இழந்து, சோர்ந்து போய்விடும். மூளை சோர்ந்துபோனால், நினைவாற்றல் கடினமானதை படித்துபுரிந்து கொள்ளும் திறன், பகுப்பாய்வு திறன், படைப்பாற்றல், கணக்கிடும் திறன், முடிவெடுக்கும் திறன், சாமர்த்தியம் உள்ளிட்ட பல முக்கியமான திறன்கள் மங்கிப் போய்விடும். எனவே மூளையை பட்டை தீட்டி வைத்திருக்கவேண்டியது இன்றைய வாழ்க்கை சூழலில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது. இல்லையெனில், நாம் முக்கியத்துவம் அற்ற மனிதராய்க்கருதப்பட்டு நமது சமூக மதிப்பை இழந்துவிடுவோம். மூளையை சுறுசுறுப்பாகவும், உற்சாகமாகவும் வைத்திருப்பதற்கான சில வழிமுறைகளை இங்கே தருகிறோம்.

**தரமான புத்தகங்களை படித்தல்**

படிப்பதில் பொதுவாக பலருக்கும் ஆர்வம் உண்டு. படித்து புரிந்து கொள்ளும் நடவடிக்கையால் மூளை சுறுசுறுப்படைகிறது. ஆனால் நாம் படிக்கும் புத்தகங்கள் எந்த மாதிரியாக இருக்கவேண்டும் என்பது இங்கே முக்கியம். சாதாரண பொழுதுபோக்கு நாவல்கள், ஜனரஞ்சக பத்திரிகைகள், மிக சாதாரண விடயங்களைப்பற்றி மேலோட்டமாக எழுதப்பட்ட புத்தகங்கள் போன்றவைகள் மூளையின் வளர்ச்சிக்கும் முதிர்ச்சிக்கும் துணைபுரியாதவை. அவற்றை சிறிதுநேரம் பொழுதுபோக்காக வேண்டுமானால் படிக்கலாம்.

மாறாக, உங்களுக்குப் பிடித்த துறையிலிருந்து எழுதப்பட்டிருக்கும் ஆராய்ச்சி புத்தகங்களையோ, அல்லது வேறு துறைகளை சேர்ந்த பகுப்பாய்வு புத்தகங்களையோ படிக்கலாம். படிப்பதோடு இல்லாமல், ஏதாவது பத்திரிகைகளுக்கு தரமுள்ள கட்டுரைகளும் எழுதி அனுப்பலாம. படித்த விடயங்களை யாரிடமாவது விவாதிக்கலாம். பொது அறிவுப்புத்தகங்களை படித்து விடயங்களை மனனம் செய்து பழகலாம். பாடசாலை மாணவர்களுடன் அது சம்பந்தமான வினாடி –வினா போட்டியில் ஈடுபடலாம். ஆங்கில மொழியின் வார்த்தைகளையும், அதன் அர்த்தங்களையும் படித்து மனனம் செய்யலாம்.

இதுபோன்று பலவித பயன் மிகுந்த செயற்பாடுகளால் மூளையானது சுறுசுறுப்பாகவும் திறன் மிக்கதாகவும் மாறும்.

**தொலைச் காட்சி பார்ப்பதை தவிர்த்தல்**

பொதுவாக நம்மை சாந்தப்படுத்திக் கொள்ள தொலைக்காட்சி பார்ப்பதை ஒரு வழக்கமாக கொண்டுள்ளோம். அதை ஒரு பொழுது போக்காகவோ அல்லது வேறு கார ணத்திற்காகவோ எடுத்துக் கொண்டாலும், தொலைக் காட்சி பார்ப்பதால் உங்களின் மூளைத்திறன் மேம்பாடு அடையாது. தொலைக் காட்சி பார்ப்பதில் உங்களின் சக்தி பெருமளவு செலவளிக்கப்படுகிறது என்பதை கவனத்தில கொள்ள வேண்டும். தொலைக்காட்சி பார்ப் பதற்கு பதிலாக ஏதாவது முக்கிய பத்திரிகைகளை படிக்கலாம் அல்லது நல்ல நண்பர்களுடன் அமர்ந்து பயனுள்ள விவாதங்களில் ஈடுபடலாம்.

**ஒரு புதிய மொழியை கற்றல்**

மொழியை கற்கும் செயலானது மூளையின் திறனை அதிகரிப்பதிலும் அதை சுறுசுறுப்பாக வைத்துக் கொள்வதிலும் முக்கிய பங்கு வகிக்கிறது. எனவே பயனுள்ள வகையில் ஒரு வெளிநாட்டு மொழியை தேர்வு செய்து அதை கற்க தொடங்க வேண்டும். அதன் மூலம் நமக்கு இரட்டை நன்மை கிடைக்கிறது.

**மூளைக்கான பயிற்சி**

மூளைக்கு பயிற்சி கொடுத்தலில் இரண்டு வகைகள் உள்ளன. அவை, உடல் ரீதியான பயிற்சி மற்றும் பகுப்பாய்வு ரீதியிலான பயிற்சி. உடல் ரீதியிலான பயிற்சியில் யோகா உள்ளிட்ட சில உடற்பயிற்சிகள் அடங்கும். மூளைக்கு ஒட்சிசனும் இரத்த ஓட்டமும் மிகவும் முக்கியம். எந்தளவிற்கு இந்த இரண்டும் கிடைக்கிறதோ அந்தளவு மூளை சக்திவாய்ந்ததாக மாறும். மேற்சொன்ன பயிற்சிகள் இந்த இரண்டையும் அதிகளவில் மூளைக்கு தருகின்றன. எனவே முறையான நபர்களின் ஆலோசனைகளைப் பெற்று அந்த பயிற்சிகளை செய்ய தொடங்கவும்.

பகுப்பாய்வு ரீதியான பயிற்சி என்பது, படம் வரைதல், வண்ண வேலைப்பாடுகளில் ஈடுபடுதல், எண் விளையாட்டுக்களில் ஈடுபடுதல், தோட்டம் வளர்த்தல், கைவினைப் பொருள் தயாரிப்பில் ஈடுபடுதல், நுணுக்கமான வேலைகளில் பங்கெடுத்தல் போன்று பல வகைப்படும். இவற்றில் நமக்கு பிடித்த மானவற்றிலோ அல்லது வாய்ப்பிருந்தால் அனைத்திலுமோ ஈடுபடலாம்.

மேற்கூறிய பயிற்சிகளையும் வழிமுறைகளையும் தொடர்ந்து பின்பற்றும் போது, நமது மூளை புதிய சக்தி பெற்று, நாம் புத்திசாலி என்ற பெயரை வாங்கலாம்.

## அறிவுக் கலசம்

வலம்புரி

ஆர்.யூ.பாலமுருகன்

# வளர்ந்து வரும் யாழ்ப்பாணத்தில் கணனிக் கற்கை நெறிகளில் NIBM இன் முக்கியத்துவம்



கடந்த சில வருடங்காளக நாடு கல்வித் துறைகளிலும் அதீதி வளர்ச்சியை நோக்கிச் செல்கின்றது. இதில் தகவல் தொழில் நுட்பத் துறையும் பாரிய வளர்ச்சியை அடைந்துள்ளது. இது யாழ்ப்பாணத்திலும் பிரதிபலிக்கின்றது. இன்றயை நிலையில் எந்தவொரு துறையும் ஏதோ ஒரு வகையில் கணனி அறிவுடன் சம்பந்தப்பட்டு இருக்கின்றது. இதற்காக நாம் அனைவருமே கணனி கற்கைநெறிகளை பின்பற்ற வேண்டிய கட்டாயத்தில் இருக்கின்றோம். கடந்த காலங்களில் நாட்டு நிலைமையினால் நாங்கள் இவற்றைச் சரியான முறையில் பெறமுடியாத நிலையில் இருந்தோம். தற்போது அதற்கான சந்தர்ப்பமும் சூழ்நிலையும் அமைக்கின்றது

**தேசிய வியாபார முகாமைத்துவ நிறுவனம் (NIBM)**

இந் நிறுவனம் வியாபார முகாமைத்துவ கற்கைநெறிகளுக்கான அங்கீகாரம் பெற்ற நிறுவனமாக விளங்குவதுடன் தகவல் தொழில்நுட்ப மற்றும் மொழிக் கற்கை நெறிகளையும் வழங்கிக் கொண்டு இருக்கின்றது. இதன் சிறப்பம்சம் என்னவெனில் இங்கு விரிவுரையாளர்கள் அனைவரும் பட்டதாரிகளாகவே காணப்படுகின்றனர். இது தனியார் நிறுவனங்களில் காணப்படுவதில்லை. இதைவிட தகவல் தொழில்நுட்ப கல்விக்கான நேர ஒதுக்கீடும் மிக அதிகமானதாகவும் அதற்கேற்ப பாட விதானமும் (Course Content) மாணவர்களுக்கு வழங்கப் படுகின்றது. அது மாணவர்களுக்கு மிக முக்கியமானதாக அமையும். இது அரச அங்கீகாரத்துடன் இயங்குவதால் அரச, தனியார் நிறுவன வேலைக ளுக்கு இந்தச் சான்றிதழ் முக்கிய மான ஆவணமாக அமையும் என்பதில் ஐயமில்லை.


கடந்த காலங்களில் கொழும்பு, வேறு நாடுகளுக்குச் சென்ற கற்ற தகவல் தொழில் நுட்பக் கல்வியை நமது மண்ணில் மிகக் குறைந்த செலவில் பெற முடிவது சாத்திய மாகியுள்ளது. NIBM ஆனது தகவல் தொழில் நுட்பத்துக்கு தேவையான அனை த்து வசதிகளையும் உள்ளடக்கிய விரிவுரை மண்டபங்களும், செயன்முறைகளுக்கான இணைய (Computer Lab) வசதிகளுடன் கூடிய கணனிக்கூடமும், மாணவர்களுக்குத் தேவையான அனைத்து நூல்களும் அடங்கிய நூலகமும் நிறுவப்பட்டு தனது சேவையினை யாழ். மண்ணுக்கு வழங்கவுள்ளது.

ஒரு சில மாதங்களில் டிப்ளோமா தகைமை சான்றிதழ் வழங்கக்கூடிய நிறுவனங்கள் பல யாழ்.மண்ணில் முளைத்துள்ள வேளையில் தமது தரத்தினை 40 வருடங்களாக உறுதி செய்து நாட்டின் முக்கிய நகரங்களில் தனது கிளைகளை நிறுவியுள்ள NIBM தற்போது யாழ்.மண்ணில் அடியெடுத்து வைத்து யாழ்.மக்களுக்கு ஒரு வரப் பிரசாத மாக அமையும்.

யாழ்ப்பாணத்தில் சான்றிதழ்களை விற் கும் நிறுவனங்களாக மாறியுள்ள கணனிக் கல்வி நிறுவனங்களின் மத்தியில் அறிவினைப் பகிர்ந்து கொள்ளும் நிறுவனமாக தேசிய வியாபார முகாமைத்துவ நிறுவனம் அமைவது யாழ்.மாணவர்களுக்கு இன்றியமையாததாகும்.

**எஸ்.நஷிகீதா**
விரிவுரையாளர்
NIBM யாழ்.பிராந்தியம்.

# கள்ளிக்காட்டு இதிகாசம்





14

கவிப்பேரரசு வைரமுத்து

- என்றவர், நிமிராமலும் சின்னுவின் பக்கம் திரும்பாமலும் "எங்க திரும்பிச் சொல்றா சின்னு..."

'நண்டுர நெல்லு...

நரியோடக் கரும்பு..."

'இதுதாண்டா சாக்கு" என்று சின்னு மண்வெட்டியை வீசியெறிந்தான்.

" இந்தத் 'தும்பம்' பொறுக்காமத்தான உப்பாரபட்டி வாத்தியாரவிட்டு ஓடியாந்தேன்... இங்கயுமா?" என்றவன் உழவு காட்டுப் புழுதிபறக்க ஓடியே போனான்.

உள்கால்சட்டைப் பட்டை தெரிய எட்டு முழ வேட்டி கட்டும் பருவம் வந்தபோது, அவன் போக்கு இன்னும் அந்நியமாயிற்று. பருத்தி விற்றுப் பவுடர் வாங்கினான். வீட்டுக்குப் பூட்டுப்போட்டு விட்டு வந்தாலும் கதவ ஒரு 'எம்பு' எம்பி, பூட்டைத் திறக்காமல் கதவு திறந்து எள்ளோ சாமையோ கல்லுப் பயறோ எதுவாயிருந்தாலும் எடுத்துப்போய் அவசர விலைக்கு விற்றுச் செலவழிக்க ஆரம்பித்தான். 'கிளப்புக்கடை'யில் சாப்பிடும் ஊதாரித்தனமெல்லாம் வந்துவிட்டது அவனுக்கு.

ஒருநாள் பேயத்தேவர் கமலை இறைத்துக் கொண்டிருந்தார் - ஒற்றை ஆளாய். தண்ணீர் கட்ட ஆளில்லை ; வழக்கமாய்த் தண்ணீர் கட்டும் அழகம்மாளுக்கு 'மேல் கால்'வலி. கத்தரிப் பாத்திகளை குண்டு குண்டாய்த் தடுத்து ஏற்கெனவே 'வாமடை' விலக்கிவிட்டு வந்து கமலை பூட்டியதால் 'தந்தண்ணி' பாய்ந்து கொண்டிருந்தது. கமலை மேட்டில் வந்து கவலையாக உட்கார்ந்தான் சின்னு. 'வராதவன் வந்திருக்கிறானே... புத்திகித்தி வந்திருச்சோ' என்று சந்தேகப்பட்டு 'இருக்காது' என்று தன்னைச் சமாதானப்படுத்திக்கொண்டு, "என்னாடா குக்கு நோவு வந்த கோழி மாதிரி தலையைத் தொங்கப் போட்டு உக்காந்திருக்கவன்... என்னா...?" என்று ஆரம்பித்தார். அவன் சுற்றி வளைக்கவில்லை; வெட்கப்படவில்லை ; வார்த்தை தேய்க்கவில்லை. முகத்தை இறுக்கமாய் வைத்துக் கொண்டு கிணற்றடியின் அருகம்புல்லை ஒடித்துப் பல்குத்திக் கொண்டே சொன்னான்.

"எனக்குக் கல்யாணம் பண்ணி வை"

செல்லத்தாயி விதவையான அதிர்ச்சியிலிருந்தே இன்னும் மீளாத காலம். இவனுக்கு என்னாச்சோ? ஏதாச்சோ? எங்க ருசி கண்டானோ? -பேயறைந்த ஆளாய்ப் போனார் பேயத்தேவர்.

பெண்பார்க்கப் போனார்கள். கட மலைக் குண்டில் இறங்கி உள்காட்டு ஒத் தையடிப் பாதையில் மூன்றுமைல் நடந் தால் கருவேலங்காட்டுக்குப் பின்னால் 'இங்கேதான் இருக்கேன்' என்று சொல்லும் காக்கிவாடம்பட்டி. கதவுள்ள வீடுக ளையும் கதவுக்கு வசதியில்லாத- கதவு தேவைப்படாத- குடிசைகளையும் சேர்த் தால் ஐம்பதுக்குள் வீடுகள் தேறும் அந்த ஊரில்.

பேயத்தேவர் கோஷ்டி காக்கிவாடம் பட்டி எல்லையை அடைந்து கலுவத் தேவர் வீடு எது என்று விசாரித்தபோது கிழவன் ஒருத்தன் "நாங் காட்றேன்" என்று கூடவே வந்து விட்டான்.

தெருச்சகதி கடந்து- வாசலில் கட்டிக் கிடந்த ஆடு மாடுகளை விரோதித்துக் கொள்ளாமல் வாசல் கடந்து, நடைபாதைச் சாணியில் வழுக்காமல் முன்னேறியபோது, "வாங்கய்யா வாங்க... எல்லோரும் வாங்க..." என்று வர வேற்ற கலுவத்தேவர் நிலைப்படியில் தலையிடித்து-அவசரமாய் உள்ளோடி மேல்சட்டையை தலை வழியே போட்டபடி திரும்பி வந்தார். ஊரில்மழை தண்ணி பேசி, விவசாயம் பேசி, விலைவாசிபேசி பெண்பார்க்கும் விஷயத்தை மெல்ல ஆரம்பித்த போது சொம்பிலிருந்த காப்பித் தண்ணியை- இருந்த இரண்டு டம்ளரை மாற்றி மாற்றிக் கழுவி -ஒவ் வொருவருக்காய் ஊற்றிக் கொடுத்துக்கொண்டே வந்தாள் அவள்.

பாதிக்கண்ணால் அவளை முழுப்பார்வை பார்த்த சின்னு பக்கத்திலிருந்த உள்ளூர் பெரிசின் தொடை கிள்ளிச் சொன்னான்;"பொண்ணை எனக்குப் புடிச் சிருக்கு" "ஏலே வெவரங்கெட்டவனே....அவகலுத் தேவன் ரெண்டாவது சம்சாரமடா!பொண்ணுக்குச் சின்னாத்தா! பொறுமையா இரு பொண்ணு வருவா." -

"ஒழச்சாத் தானப்பா ஒழக்கு நிறையும்' 'என்றார் அவர்.

"கழுத பேஞ்சா கம்மா நிறையப் போகுது?" என்றான் அவன்.

ஐந்தாறு காலிப்பயல்களைக் கூட்டுச் சேர்த்துக் கொண்டு "அடிக்கடி சொத்துப்பிரிச்சுக் குடு" என்று சலம்பல் பண்ண ஆரம்பித்தான். அவன் எல்லா அழிம் புகளையும் பொறுத்துக்கொண்டும் சிலநேரம் தண்டித்துக் கொண்டும் , சில நேரம் மன்னித்துக்கொண்டும் பொறுமை எழுதிய விதி வழியேபோய்க் கொண்டிருந்த பேயத்தேவர் அவன் கள்ளச்சாராயமும் காய்ச் சுகிறான் என்று தெரிந்த போது "போச்சே! என் வம்சம் போச்சே" என்று இடி விழுந்த பனைமரமாய்க் கருகிப்போனார்.

'மண்ணும் தணியுந்தாண்டாகுடியானவன் கும்புடுறசாமி'அது பேயத் தேவரின் கடவுட் கொள்கை.அன்று ஊரடித் தோட்டத்தில் மிளகாய் நடவு. மொக்கராசு 'தண்ணி வெலக' மூணு பொம்பளையாளு நாத்துநட -நடவுக்குக் கோளாறு சொல்லிக்கொண்டிருந்த பேயத் தேவர் வாய்க்காலில் நீர் வரத்துக் கம்மியாகிக் கொண்டே வருவது கண்டு கமலை இறைத்துக் கொண்டிருந்த கொறண்டியைப் பார்த்துக் கத்தினார்.

"ஏலே குறுக்குச் செத்தவனே!வெரசா எறைடா வெங்கம் பயலே...."

- அவர் கத்தியது ஒரு மைல் சுற்றளவு சுற்றி யது.

பெருசு அவனை ரகசியமாக காது கடித்து மானம் காத்தார்.

பொண்ணு முகம் லட்சணம். ஆனால் முற்றாத தேகம். வளராத வாழைக்குருத்து மாதிரி. ஆயிரம் பொய்களுக்கு ஒன்றிரண்டு குறையச் சொல்லிக் கல்யாணத்தை முடித்துவிட்டார் கலுவத்தேவர்.

சின்னுவின் இல்லறம் நல்லறமாய் இல்லை. ராத்திரித் தாம்பத்யம் ஒன்றைத்தவிர-குடித்தனத்தின் மற்ற அம்சங்களில் அவனுக்குப் பொறுமையில்லை. கல்யாணம் என்பது இன்னோர் உயிரின் மனசு-உடம்பு- வயிறு மூன்றையும் திருப்தி செய்வது என்ற உண்மைகளோடு அவனால் ஒத்துப் போக முடியவில்லை. குருத்தெலும்பு முத்தாத ஒரு பெண்ணைக் கட்டிக்கொண்டு அவனை எப்படிப் பாவிக்க வேண்டுமென்ற மெல்லிய அணுகுமுறை தெரியாத பேய்ப்பயல் அவன். மல்லிகைப் பூப்பந்தைச் சாணிக் கூடை போட்டு மூடிவைத்த மாதிரி மூச்சுத்திணறிப் போனாள் சின்னு பெண்டாட்டி சிறுமி கலுவாயி. ஐந்தாம் நாளே அவன் அடிதாங்காமல் காக்கிவாடன் பட்டிக்கு ஓடிப் போனாள்.

பெரிசுகளெல்லாம் கூடி அடிக்கடி அவர்களை ஒட்டவைத்தார்கள்.கருவேலமரத்துக் கோந்து போட்டாலும் உடைந்த மண்சட்டி ஒட்டுமா?

ஊதாரியானான்; ஊரோடு ஒட்ட மறுத்தான். தன் போக்கில் வாழத் தலைப்பட்டான். சட்டை கசங்காமல் சம்பாதிக்க ஆசைப்பட்டான்; கடைசியில் கஞ்சா விற்க ஆரம்பித்தான்.

அப்போதுதான் பேயத்தேவர் உடைந்துபோனார்.

கொறண்டி மீது குற்றமில்லை.

ஒத்தக்கமலை...

தொத்த மாடு...

ஓட்(டை)ச் சாலு...

கிழிஞ்ச தோலு...

- இந்த உபகரணங்களை வைத்துக் கொண்டு அவன் ஆகாய கங்கையையா அள்ளி ஊற்றிவிட முடியும்?

சாலில் முகர்ந்து தோலில் வெளியேறுவதற்குள் பாதிநீர் ஓட்டைகளின் வழியே கிணற்றுக் குள்ளேயே ஒழுகிவிடுவதால் 'வத்தாத சமுத்திரம்' என்னும் பெருமை பெற்றது அந்தக் கிணறு.


"ஒரு நாத்தும் சேதம் வராம நடுங்காத்தா. எழுவனம்பட்டி தங்கையாபிள்ளைகிட்டக் கடஞ் சொல்லி வாங்கியாந்த நாத்து..." என்ற பேயத்தேவர் நாத்துகளுக்கிடையில் ஒருசாண் இடைவெளி இருக்கிறதா என்பதைக் கண்ணாலேயே அளந்து கங்காணி வேலை பார்த்துக் கொண்டிருந்தார்.

"ஏ மாமு... மொளகா நல்லா வெளஞ்சா நல்ல வெலைக்கி வித்தா எணக்கென்ன குடுப்ப?" என்றாள் ஒரு நடவுக்காரி; அறுபது வயசானாலும் 'அக்குறும்பு' குறையாத கிழவி.

"நீ அடுத்த வருசமே பிள்ளப் பெத்துக்க... ஒம் பிள்ளைக்கு அஞ்சுபவுன் தங்கத்துல அன்னாக் கயிறு செஞ்சுபோடறேன்" என்றார் பேயத்தேவர் பின்வாங்காமல்.

(வளரும்)





ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி மையத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட யாழ்ப்பாண நகர அபிவிருத்தியும் அதில் ஊடகங்களின் வகிபங்கும் எனும் கருத்தரங்கு நேற்று முன்தினம் ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி மையத்தில் நடைபெற்றது. இதில் பொறியியலாளர் ரி.பாரதிதாசன்,யாழ்.மாநகர சபை முன்னாள் ஆணையாளர் சி.வி.கே.சிவஞானம், யாழ்.பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை ஆகியோர் உரையாற்றுவதையும் நிகழ்வில் கலந்துகொண்டவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:-எஸ்.கரன்)

# மன்னாரில் இனந்தெரியாதோரால் கடத்தப்பட்டவர்கள் விடுவிப்பு

(கொழும்பு)

இனந்தெரியாதவர்களால் கடந்த 6ஆம் திகதி மன்னாரில் கடத்தப்பட்ட 5 பேர் நேற்று முன்தினம் விடுவிக்கப்பட்டுள்ளனர். இவ்வாறு விடுவிக்கப்பட்டவர்களில் பெண் ஒருவரும் அடங்குவதாக தெரிவிக் கப்படுகிறது.

இந்த ஐந்து பேரும் மன்னார் பொலிஸில் ஒப்படைக்கப்பட்டு விடுவிக்கப்பட்டுள்ளனர்.

வெள்ளை வானில் வந்த குழுவொன்று இவர்களைக் கடத்தியுள்ளதாகவும் இவர்கள் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்தவர்கள் என தகவல்கள் வெளியாகியுள்ளன.

மன்னார் பகுதியில் நேற்று முன் தினம் மாலை 6.45 மணி அளவில் நான்கு இளைஞர்கள் மக்கள் நடமாட்டம் அதிகம் உள்ள பகுதியில் வைத்து ஆயுததாரிகளினால் கடத்திச் செல்லப்பட்ட சம்பவம் மன்னார் மக்கள் மத்தியில் பெரும் பீதியை ஏற்படுத்தியுள்ளது.

கடத்திச் செல்லப்பட்டவர்கள் பேசாலை பகுதியைச் சேர்ந்த முச்சக்கர வண்டி சாரதியான தர்மா கருசல் பகுதியைச் சேர்ந்த முஸ்லிம் இளைஞரான ஜலீஸ் தோட்டவெளி பகுதியைச் சேர்ந்த கமல் மற்றும் எழுத்தூர் பெரியகமம் பகுதியைச் சேர்ந்த தில்லைநாதன் ஆகிய நான்கு பேரும் தனித்தனியே கடத்திச் செல்லப்பட்டுள்ளனர்.

குறித்த நான்கு பேரையும் வெள்ளை வானில் கடத்திச் செல்லும் போது மன்னார்-தலைமன்னார் பிரதான வீதியில் வைத்து மக்கள் வாகனத்தை மறித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இருந்தபோதும் அந்த வானில் இருந்த ஆயுததாரிகள் ஆயுதங்களைக் காட்டி மக்களை அச்சுறுத்திவிட்டு தப்பிச் சென்றுள்ளனர். (ஸ்ரீ-2)

## தைப்பொங்கல் நிகழ்வு

உடுவில் தெற்கு நிலா சனசமூக நிலைய முன்றலில் எதிர்வரும் 15ஆம் திகதி காலை 10 மணிக்கு தலைவர் நா.இரமேஸ்வரன் தலைமையில் தைப்பொங்கல் நிகழ்வு சிறப்பாக நடைபெறவுள்ளது. அன்றைய தினம் மாலை கிராம மக்களின் விளையாட்டு நிகழ்வுகளும் கலைநிகழ்வுகளும் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-3)

# வெள்ளம் காரணமாக கொழும்பு -மட்டு புகையிரத சேவை இடை நிறுத்தம்

கிழக்கு மாகாணத்தில் தொடர்ச்சியாகப் பெய்து வரும் காற்றுடன் கூடிய பலத்த மழையால் ஏற்பட்டுள்ள வெள்ளப்பெருக்கு காரணமாக மட்டக்களப்புக்கும் கொழும்புக் கும் இடையிலான புகையிரத சேவை பாதிக்கப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இரவு கொழும்பிலிருந்து புறப்பட்ட புகையிரதம் ஏறாவூர் வரை சென்று அங்கிருந்து மட்டக்களப்புக்கு செல்லமுடியாததன் காரணமாக ஏறாவூரில் தரித்து நிற்பதாக மட்டக்களப்பு புகையிரத திணைக்கள பணிப்பாளர் கே.எஸ். துரைராஜா தெரிவித்தார்.

இந்நிலையில் மட்டக்களப்பிலிருந்து கொழும்புக்கான புகையிரத சேவை இடம் பெறவில்லையெனவும் மட்டக்களப்பிலிருந்து பொலனறுவைக்கான புகையிரதம் சேவையில் ஈடுபடவில்லையெனவும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை மட்டக்களப்பு மாவட்டத்தில் வெள்ளம் காரணமாக இடம்பெயரும் மக்களுக்கு பொது அமைப்புகளும் பாதுகாப்புப் படையினரும் பொலிஸாரும் உதவியளித்து வருகின்றனர். (ஸ்ரீ-4)

# சனத்தொகை மதிப்பீட்டு நடவடிக்கைக்கு 700 மில்லியன் ரூபா செலவீடு

(கொழும்பு)

சனத்தொகை மதிப்பீட்டு நடவடிக்கைகளுக்காக சுமார் 700 மில்லியன் ரூபா செலவிடப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

30 வருடங்களின் பின்னர் நாடு தழுவிய ரீதியில் 25 மாவட்டங்களிலும் சனத்தொகை மதிப்பீடு செய்யப்படவுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

கடந்த 2001ஆம் ஆண்டில் நடைபெற்ற சனத்தொகை மதிப்பீட்டு நடவடிக்கைகளின் போது 18 மாவட்டங்களில் மட்டுமே சனத்தொகை மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டது.

இதேவேளை நாட்டின் ஊழியப்படையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாக சனத்தொகை மற்றும் புள்ளி விபரவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.

கடந்த ஆண்டின் மூன்றாம் காலாண்டுப் பகுதியில் ஊழியப்படையின் அளவு வீழ்ச்சி கண்டுள்ளது. (ஸ்ரீ-2)

# அமைச்சரவையை வரையறுக்க அரசு சட்டம் இயற்ற வேண்டும்

## ஐ.தே.க. கோரிக்கை

அமைச்சரவையின் எண்ணிக்கையை வரையறுப்பதற்கு அரசாங்கம் சட்டம் இயற்ற வேண்டும் என ஐக்கிய தேசியக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் விஜேயதாச ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

எந்தவொரு அரசாங்கத்தினாலும் நியமிக்கப்படக்கூடிய உச்சளவு அமைச்சர்களின் எண்ணிக்கை தொடர்பில் சட்டம் அமுல்படுத்தப்பட வேண்டியது மிகவும் அவசியமானது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

சிரேஷ்ட அமைச்சர்களுக்கான அதிகாரங்களைப் பகிர்வது தொடர்பில் நடைபெற்ற விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய போது அவர் இதனை தெரிவித்துள்ளார்.

இவ்வாறான சட்ட திருத்தங்களுக்கு தாம் பூரண ஆதரவளிக்க தயார் என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

பிரான்ஸ் போன்ற நாடுகளில் அமைச்சர்களின் எண்ணிக்கை 15 ஆக வரையறுக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

அமைச்சர் பதவிக்கு மக்கள் மத்தியில் காணப்பட்ட மரியாதை கிரமமாக அழிவடைந்து வருவதாக குறிப்பிட்டுள்ளார்.

தற்போதைய அமைச்சரவை கலாசாரத்தை முற்றுமுழுதாக இல்லாதொழிக்க வேண்டியது அவசியமானது என அவர் தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்காவை ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் வாழ்நாள் தலைவியாக பதவி வகிக்குமாறு அன்று கோரிய அமைச்சர் ஒருவர் இன்று ஜனாதிபதிக்கு மிகவும் நெருக்கமாக செயற்பட்டு வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை ,காலச்சூழலுக்கு ஏற்ப அமைச்சரவையின் எண்ணிக்கை நிர் ணயிக்கப்படும் என பொருளாதார அபி விருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# கட்டடம் உடைந்து விழுந்ததில் ஒருவர் பலி

கண்டி பலகொல்ல ஸ்ரீ முத்துமாரி அம்மன் கோயிலில் உள்ள புதிய கல்யாண மண்டப கட்டடத்தில் ஒரு பகுதி நேற்றுக் முன்தினம் காலை உடைந்து விழுந்ததால் அக் கட்டத்தில் வேலை செய்துகொண் டிருந்த ஊழியர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

பொன்னையா வயது 62 என்பவரே கட்டட இடிபாட்டிற்குள் சிக்கி உயிரிழந்தவர் ஆவார். சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பலகொல்லப்பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஸ்ரீ-2)

# தேர்தல் பிரசாரப் பொறுப்புகள் அமைச்சர்களிடம் ஒப்படைப்பு

(கொழும்பு)

தேர்தல் பிரசாரங்களை வழி நடத்தும் பொறுப்பு அமைச்சர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மாவட்ட அடிப்படையில் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களை வழி நடத்தும் பொறுப்பு சிரேஷ்ட அமைச்சரவை அமைச்சர்களுக்கு வழங்கப்பட்டுள்ளதாகவும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் நேரடிப் பணிப்புரைக்கு அமையவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

வன்முறைகளற்ற முறையில் தேர்தல் கள் நடத்தப்பட வேண்டுமென ஜனாதிபதி வலியுறுத்தியுள்ளார்.

அத்துடன் வேட்பாளர்களை தெரிவு செய்யும் போதும் மாவட்ட அடிப்படையில் சிரேஷ்ட அமைச்சர்களின் ஆலோசனை பெற்றுக்கொள்ளப்படும் என தெரிவிக்கப்படுகிறது. (ஸ்ரீ-2)

# ஒரே தடவையில் தேர்தல்களை நடத்த முடியாமைக்கு அர்ஜுன ரணதுங்கவே காரணம்

## அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவிப்பு

(கொழும்பு)

ஜனநாயகத்தேசிய கூட்டமைப்பின் துணைத் தலைவர்களில் ஒருவரான அர்ஜுன ரணதுங்கவின் கோரிக்கையினால் ஒரே தடவையில் தேர்தல்களை நடத்த முடியாமல் போனது என வீடமைப்பு அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

உலகக் கிண்ணப்போட்டிகள் நடைபெறவுள்ளதாகவும் இதனால் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களை ஒத்தி வைக்குமாறு அர்ஜுன அரசாங்கத்திடம் கோரியிருந்ததாக குறிப்பிட்டுள்ளார்.

சில தரப்பினர் போலியான தகவல்களை வெளியிட்டு வருவதாக அவர் தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்திற்கு பாதகத்தன்மையுடைய உள்ளூராட்சி மன்றங்களின் தேர்தல்கள் ஒத்தி வைக்கப்பட்டுள்ளதாக வெளியாகும் செய்திகளில் உண்மை இல்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

எந்தவிதமான தடைகளுமின்றி உள்ளூராட்சி மன்றத்தேர்தல்களில் அரசாங்கத்தினால் வெற்றியீட்ட முடியும் என அவர் தெரிவித்துள்ளார்.

கண்டி அஸ்கிரிபீடாதிபதி உடுகம ஸ்ரீபுத்தரக்கித தேரரை சந்தித்து ஆசி பெற்றுக் கொண்ட வேளையில் அவர் இதனைக் குறிப் பிட்டுள்ளார். (ஸ்ரீ-2)

# நிலையான வீதிகளை நிர்மாணிக்கும் நோக்கத்தையே அரசு கொண்டுள்ளது

## ஜனாதிபதி தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டில் அபிவிருத்தி வேலைத் திட்டங்களை மேம்படுத்துவதற்கும் மக்களின் எதிர்பார்ப்புகளை வெற்றி கொள்வதற்கும் பெருந்தெருக்கள் அமைச்சுக்கு பாரிய பொறுப்புக்கள் இருக்கின்றன என்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

அபிவிருத்தியை முறையாக மக்களின் கைகளுக்குள் செல்வதற்கு வீதி அபிவிருத்தி மிக முக்கிய மானதாகும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். பெருந்தெருக்கள் அமைச்சில் நேற்று முன்தினம் நடைபெற்ற விசேட கலந்துரையாடலில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்த போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

கடந்த 6 வருடங்களில் முன்னெடுக்கப்பட்ட செயற்பாடுகள் மற்றும் எதிர்காலங்களில் மேற்கொள்ள வேண்டிய திட்டங்கள் தொடர்பில் இந்தக் கலந்துரையாடலில் விரிவாக ஆராயப்பட்டது. இந்த அமைச்சுக்காக கடந்த காலங்களில் 102 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டது.

மக்களின் வாழ்க்கையை மேம்படுத்துவதற்காகவே பெருந்தெருக்கள் அபிவிருத்தி அமைச்சுக்கு கூடுதலான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. அதன் பெறுபேறுகளை மக்கள் அனுபவிக்க வேண்டும்.

தற்காலிகமாக நிர்மாணிப் பதை விடவும் நிலையான வீதிகளை நிர்மாணிக்கும் நோக்கத்தையே அரசாங்கம் கொண்டிருக்கிறது. அந்தப் பெறுப்புக்களை இனம் கண்டு செயற்படுத்துவது அதிகாரிகளின் பொறுப்பாகும்.

வீதி அபிவிருத்தி வேலைத் திட்டத்தின் கீழ் கடந்த வருடம் 720 கிலோமீற்றர் நீளமான வீதியே அபிவிருத்தி செய்யப்படவிருந்தது. எனினும் 855 கிலோமீற்றர் நீளமான வீதியை அபிவிருத்தி செய்ய முடிந்துள்ளது. இலக்கிற்கு அப்பால் செல்ல முடிந்துள்ளது.

மாத்தறை–கொழும்பு அதிவேக வீதி நிர்மாணப் பணிகளில் கூடுதலான பிரிவு நிறைவடைந்து விட்டது. யூன் மாதம் அளவில் அந்த வீதியை மக்களிடம் ஒப்படைப்பதற்கு அரசாங் கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

அதேபோல் கட்டுநாயக்க வீதியும் 30 வீதம் நிறைவடைந்து விட்டது. 2012ஆம் ஆண்டளவில் அந்த வீதியையும் பயன்படுத்துவதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டிகளில் பார்வையிடுவதற்கு வருகை தருகின்ற உள்ளூர் மற்றும் வெளியூர் சுற்றுலாப் பயணிகளின் வசதிவாய்ப்புக்களை கவனத்தில் கொண்டு போட்டிகள் நடைபெறுகின்ற பிரதேசங்களில் வீதி கட்டமைப்பை மேம்படுத்துவதற்கு அவசரமாக நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி ஆலோசனை வழங்கினார். (ஸ்ரீ–4)

## மாநகரசபையின் ஆட்சிக் காலத்தை மேலும் ஓராண்டு நீடிக்கத் தீர்மானம்

மாநகர சபைகளின் ஆட்சிக் காலத்தை மேலும் ஓராண்டுக்கு நீடிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.


ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரங்களை பயன்படுத்தி மாநகர சபைகளின் ஆட்சிக்காலத்தை நீடிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டித் தொடரைக் கருத்திற்கொண்டு முதலில் தேர்தல்களை ஒத்தி வைக்கத் தீர்மானிக்கப்பட்டதாக ஐக்கிய மக்கள் சுதந்திரக்கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

மாநகரசபைத் தேர்தல்களை ஒத்தி வைக்குமாறு மேயர்களின் பேரவையும் கோரிக்கை விடுத்துள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது. அபிவிருத்தித் திட்டங்களை பூர்த்தி செய்யும் நோக்கில் இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஸ்ரீ–4–2)

## ரணில்-மனோ பேச்சுவார்த்தை இணக்கப்பாடின்றி முடிவு

(கொழும்பு)



எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத்தேர் தலில் இணைந்து போட்டியிடுவது தொடர்பாக ஐக்கிய தேசியக்கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவிற்கும் ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசனுக்கும் இடையில் சந்திப்பொன்று இடம்பெற்றது.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இந்தப் பேச்சுவார்த்தையின் போது கொலன்னாவை, அவிசாவளை ஆகிய பிரதேசங்களையும் மற்றும் கம்பஹா, களுத்துறை, கண்டி, நுவரெலியா, இரத்தினபுரி, கேகாலை ஆகிய மாவட்டங்களை யும் சார்ந்த பிரதேச சபைகளில் இணைந்து போட்டியிட முடியுமா என்பது தொடர்பாக ஆராயப்பட்டுள்ளது.

மேலதிக பேச்சுவார்த்தைகளை அடுத்தவார ஆரம்பத்தில் தொடர்வதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளதாக ஜனநாயக மக்கள் முன்னணி விடுத்துள்ள ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஸ்ரீ–2)

## பாலஸ்தீனர்களுக்கு தனிநாட்டிற்கான உரிமை இருப்பதாகக் கூறுவது கேலிக்குரியது

### பாதுகாப்புச் செயலர் தெரிவிப்பு

இஸ்ரேல் சென்றிருக்கும் இலங்கைப் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ அந்நாட்டின் உயர்மட்டப் பாதுகாப்பு அதிகாரிகளைச் சந்தித்திருப்பதாகவும் இதன் போது பாலஸ்தீனம் தொடர்பில் இஸ்ரேல் முன்னெடுத்துவரும் கொள்கைகளை நியாயமானது எனக் கூறியிருப்பதாகத் தெரியவருகிறது.

பலாஸ்தீன மக்களின் சுய உரிமைகளுக்கு எதிராக கருத்துக்களை வெளியிட்டுள்ள பாதுகாப்பு செயலாளர் பாலஸ்தீனர்களுக்கு தனிநாட்டிற்கான உரிமை இருப்பதாகக் கூறுவது கேலிக்குரியது எனத் தெரிவித்துள்ளதாகவும் தெரியவருகிறது.

அதேபோல் பயங்கரவாதத்திற்கு எதிரான தேவையான யுத்தத்தையே இஸ்ரேல் நடத்துவதாகவும் உச்ச அளவு ஒத்துழைப்புக்களை வழங்க அவர் இணங்கியிருப்பதாகவும் மேலும் தெரியவருகிறது.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பாலஸ்தீனம் தொடர்பாக கொண்டுள்ள கொள்கைகளுக்கு முற்றும் விரோதமான கருத்தை வெளியிட்டுள்ள பாதுகாப்புச் செயலாளர் தொடர்பில் கருத்துவெளியிட்டுள்ள இலங்கை பாதுகாப்புத்துறையின் உயர் அதிகாரியொருவர் இது அரசாங்கத்தின் இரட்டை நிலைப்பாட்டை வெளிப்படுத்துவதாகக் கூறியுள்ளார்.

எந்தவொரு அரசாங்கமோ அமைப்புக்களோ தமது ஆயுதப் போராட்டத்தைக் குறைத்து மதிப்பிடுவதானது அவர்களின் அறிவில் காணப்படும் குறைபாடு மற்றும் உண்மையை மறைத்து தமது தனிப்பட்ட நலன்களுக்காக செயல்படுபவர்களே தவிர அதில் எவ்வித நன்மையும் இல்லையென ரம்மல்லாவிலுள்ள ஹமாஸ் அமைப்பின் அரசியல் மற்றும் ஆயுதப் பிரிவின் அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ–2)

## 2011.01 10 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

★ 1475 - மல்தாவியாவின் மூன்றாம் ஸ்டீபன் ஒட்டோமான் பேரரசுப் படைகளைத் தோற்கடித்தான்.

★ 1645 - லண்டனில் முதலாம் சார்ள்ஸ் மன்னருக்கு ஆதரவாக செயற்பட்டமைக்காக ஆயர் வில்லியம் லாவுட் கழுத்து வெட்டிக் கொல்லப்பட்டார்.

★ 1806 - கேப் டவுனில் டச்சு குடியேறிகள் பிரித்தானியரிடம் சரணடைந்தனர்.

★ 1810 - நெப்போலியன் பொனபார்ட் 14 ஆண்டுகளாகப் பிள்ளைகள் இல்லாத நிலையில் ஜொசப்பின் என்ற தனது முதல் மனைவியை விவாகரத்துச் செய்தான்.

★ 1840 - ஐக்கிய இராச்சியத்தில் முன் கட்டணம் செலுத்தப்படக்கூடிய கடித உறையுடன், சீரான பென்னி தபால் சேவை ஆரம்பித்து வைக்கப்பட்டது.

★ 1851 - அமெரிக்க உள்நாட்டுப் போர்: புளோரிடா கூட்டமைப்பில் இருந்து விலகியது.

★ 1863 - உலகின் மிகப் பழைமையான சுரங்க தொடரூந்து பாதை லண்டனில் திறக்கப்பட்டது.

★ 1881 - யாழ்ப்பாணம் சம்பத்தரிசியார் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டது.

★ 1920 - முதலாம் உலகப் போரை முடிவுக்குக் கொண்டு வர கூட்டு நாடுகள் தமது முதலாவது கூட்டத்தை ஆரம்பித்தன. வெர்சாய் ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டது.

★ 1924 - பிரித்தானியாவின் நீர்மூழ்கிக் கப்பல் எல்–34 ஆங்கிலக் கால்வாயில் மூழ்கியதில் 43 பேர் கொல்லப்பட்டனர்.

★ 1946 - லண்டனில் ஆரம்பமாகிய ஐக்கிய நாடுகளின் முதலாவது பொதுச் சபைக் கூட்டத்தில் 51 நாடுகள் பங்கு பற்றின.

★ 1962 - பெருவில் நிகழ்ந்த சூறாவளியில் 4 ஆயிரம்பேர் வரை கொல்லப்பட்டனர்.

★ 1984 - 117 ஆண்டுகளின் பின்னர் வத்திக்கானும் ஐக்கிய அமெரிக்காவும் தூதரக உறவுகளை ஏற்படுத்திக் கொண்டன.

★ 1989 - கியூபா படைகள் அங்கோலாவில் இருந்து வெளியேற ஆரம்பித்தன.

★ 1995 - உலக இளையோர் நாள் பிலிப்பைன்ஸ் நாட்டில் இடம்பெற்றது.

★ 2001 - விக்கிபீடியா நியூபீடியாவின் கீழ் ஆரம்பிக்கப்பட்டது. இது பின்னர் 5 நாட்களின் தனித்தளமாக இயங்க ஆரம்பித்தது.

★ 2005 - தெற்கு அவுஸ்திரேலியாவில் அயர் குடாநாட்டில் இடம்பெற்ற காட்டுத் தீயில் சிக்கி 9 பேர் இறந்தனர். 113 பேர் காயமடைந்தனர்.

### பிறப்புகள்

★ 1869 - கிரிகோரி ரஸ்புட்டீன், ரஷ்ய மத குரு (இ.1916)

★ 1883 - டால்ஸ்டாய், ரஷ்ய எழுத்தாளர் (இ.1945)

★ 1916 - சூன் பேர்க்ஸ்ட்ரொம், மருத்துவத்துக்கான நோபல் பரிசு பெற்றவர் (இ.2004)

★ 1936 - ரொபேர்ட்வில்சன், நோபல் பரிசு பெற்ற அமெரிக்கர்

★ 1940 - கே.ஜே.யேசுதாஸ், இந்தியப் பாடகர்

★ 1974 - கிருத்திக் ரோஷன், இந்திய நடிகர்

### இறப்புகள்

★ 1761 - ஆனந்த ரங்கம் பிள்ளை, தமிழில் நாட் குறிப்பு எழுதியவர் (பி.1709)

★ 1778 - கரோலஸ் லின்னேயஸ், சுவீடன் நாட்டு தாவரவியலாளர், விலங்கியலாளர், மருத்துவர் (பி.1707)

★ 1904 - ஜீன் லியோன் ஜேர்மி, பிரெஞ்சு ஓவியர், சிற்பர் (பி. 1824)

★ 1951 - சின்கிளயர் லூயிஸ், நோபல் பரிசு பெற்ற அமெரிக்க எழுத்தாளர் (பி.1885)

★ 1986 - யாரொஸ்லாவ் செய்ஃபேர்ட் நோபல் பரிசு பெற்ற எழுத்தாளர் (பி.1901)

★ 1997 - அலெக்சாண்டர் ரொட், நோபல் பரிசு பெற்றவர் (பி.1907)

★ 2006 - ஆர்.எஸ்.மனோகர், தமிழ்த் திரைப் பட நாடக நடிகர்.

★ 2008 - பாண்டியன், தமிழ்த் திரைப்பட நடிகர்




1974 - யாழ்ப்பாணத்தில் 4ஆவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டின் இறுதி நாள் நிகழ்வில் 11 பொதுமக்கள் பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி கொல்லப்பட்டனர்.

# 30 ஆம் திகதியில் பிறந்த உங்கள் பலன் எப்படி?

*கலைத்துறையின் அனைத்துத் துறைகளிலும் வியாபித்திருக்கும் 30 ஆம் திகதியில் பிறந்தவர்கள்!*

3 ஆம் எண் வரிசையில் வரும் 30ஆம் திகதி பிறந்தவர்கள் 3 ஆம் எண்ணின் குணத்தையும் அதைவிட அதிகமாக பூச்சியத்தின் குணத்தையும் பெற்றிருப்பார்கள். இவர்கள் காரண காரியமின்றி பேசும் குணம் கொண்டவர்கள். எதையும் மிகைப்படுத்திச் சொல்லும் தன்மை கொண்டவர்கள். ஒருவரைப் பற்றி சரியாக அறியாமல் மிக நல்லவர்-வல்லவர் என்று பேசிவிட்டு பின்பு அதே நபரை தரக் குறைவாகப் பேசுவார்கள். இவர்களிடம் தான் மட்டும் முன்னேற வேண்டும் மற்றவர்கள் எல்லாம் தனக்குக்கீழ் கஸ்ரப்பட வேண்டும் என்ற எண்ணம் அதிகம் காணப்படும். பேச்சால் உயர்வு பெறும் இவர்கள் அதே பேச்சால் தான் மதிப்பையும் இழப்பார்கள். இவர்கள் பெரும்பாலும் மனைவிக்கு அடிமையாகவே இருப்பதைக் காணலாம். வசதியுள்ளவரை இவர்களுக்கு எதிலும் வெற்றி என்ற நிலையிருக்கும். பெண்களால் அதிகம் சம்பாதிக்கக் கூடியவர்களும் இவர்களே. இவர்களின் தொழில் எண் 2 தொழில் உதவி எண்கள் 5, 7.

இவர்கள் பெரும்பாலும் கல்வி, கஜனா, எழுத்து, பத்திரப்பதிவு போன்ற துறைகளில் இருப்பார்கள். இவர்களை மற்றவர்கள் புரிந்துகொண்டு ஆட்டிவைக்கும் நிலையிருக்கும். சுறுசுறுப்பாக இயங்கும் தன்மையுடையவர்களாதலால் எப்போதும் எதையாவது செய்துகொண்டே இருப்பார்கள். பிறர் தம்மை புகழவேண்டும்-பாராட்டவேண்டும் என்று நினைத்தே செயற்படுவார்கள். தொழில் எண்ணாக 3 வருவதால் இந்த எண்ணின் ஆதிக்கம் மட்டும் இருந்தாலே போதும் நினைத்ததைச் சாதித்துவிடுவார்கள். எதிர்பாராத சூழ்நிலையில் மிகப்பெரிய தவறுசெய்து விட்டு விழிப்பதும் உண்டு. தொழில் உதவி எண்களான 5,7 ஆகியவை இடைவெளி விட்டுதான் தன் ஆதிக்கத்தை செலுத்தும். இதனால் திடீர் சோர்வு அல்லது முயற்சிகளில் பின்வாங்குதல் அடிக்கடி நிகழும். 3ஆம் எண்ணின் ஆதிக்கம் குறைவாக உள்ளவர்கள் தொழில் நட்பு எண்களின் ஆதிக்கத்தால் ஒரே மாதிரியான நிலையைப் பெற்றிருப்பார்கள். பெண்களால் அதிகம் நன்மையும் தீமையும் பெறக் கூடிய இவர்கள் வியாழக்கிழமை தோறும் சகஸ்ர லிங்கத்திற்கு வில்வ அர்ச்சனை செய்து வந்தால் நன்மைகள் பெறலாம்.

இவர்கள் இளம் வயதிலேயே பொருளாதார மேன்மை பெற்றவர்களாக இருப்பார்கள். எதிலும் தான் என்ற ஆதிக்கம் அதிகம் காணப்படும். பெண்களை அதிகம் நேசிப்பார்கள். அடுத்தவரை வீழ்த்தியாவது முன்னேற வேண்டும் என்ற எண்ணம் அதிகம் காணப்படும். பேராசை பிடித்தவர்களாக இருப்பார்கள். பேச்சில் எல்லாம் துறந்தவர்களைப் போல் பாசாங்கு செய்வார்கள். உள்ளே ஒன்று, வெளியே ஒன்று என்று செயல்படுவார்கள். தொழில் துறைகளில் மிக அதிகமான திறமைகள் இருக்கும். பலரையும் பேசியே படியவைத்து விடுவார்கள். இவர்களுக்கு தொழில் எண், பிறந்த திகதி எண்களோடு தொழில் உதவி எண்களும் வரிசையாக நன்மையைச் செய்வதால், தொடர்ந்து ஜெயிப்பவர்களாக இருப்பார்கள். வாழ்நாளில் 30 ஆண்டுகள் மிக அதிகமாக நன்மையைப் பெறக் கூடியவர்கள் இவர்களே. (விதி எண் மற்றும் பெயர் எண்ணைப் பொறுத்து ஆதிக்க நிலை மாறுபடும்). விதி எண்ணும் பெயர் எண்ணும் சிறந்த ஆதிக்கத்தைப் பெற்றிருந்தால் மிக உயர்ந்த நிலைக்குச் சென்று விடுவார்கள். இவர்களின் சரிவுக்குக் காரணம் பெண்களாக இருப்பதால், பெண்களிடம் மிகவும் கவனமாக இருப்பது நல்லது. இவர்களுக்கு மனைவி எண் சரியாக அமைவதில்லை. மனைவிக்கு ஏற்ற கணவன் எண்தான் அமையும். அதனால் தான் மனைவி சொல்லே மந்திரம் என்று இருக்கிறார்கள். (மனைவி எண் 9). இவர்கள் திங்கட்கிழமை தோறும் நெய் விளக்கு ஏற்றி அனுமனை வழிபட்டு வந்தால் மேன்மை அடையலாம்.

இவர்கள் தொழிலுக்காகப் பிறந்தவர்களாகவே இருப்பார்கள். இவர்களின் பிறந்த திகதி எண்ணும் தொழில் எண்ணுமாகிய 3இன் ஆதிக்கக் குறைபாட்டால்தான் இப்படி இருக்கிறார்கள். தொழில் உதவி எண்களான 5, 7 இன் ஆதிக்கம் இவர்களை வழிநடத்திச் சென்று சீரான வாழ்வைக் கொடுக்கும். பெயர் எண்களின் ஆதிக்கம் நன்றாக இருந்தால் தொழிலாளர்களுக்குத் தலைமை ஏற்று வழி நடத்தும் நிலை உண்டாகும். அவ்வப் போது சுயநலம் காணப்பட்டாலும், அடுத்தவரிடத்தில் அன்பு பாராட்டவும் பிறருக்கு உதவிகள் செய்யவும் தயங்கமாட்டார்கள். எதையும் சிந்தித்து நிதானமாகச் செயற்படும் குணம் இருக்கும்.

அளவாகப் பேசும் குணம் கொண்டவர்கள். எங்கும் தன் நிலை அறிந்து செயற்படுவார்கள். மனைவியால் யோகம் கிடைத்த போதிலும் இருப்பதை வைத்து நல்ல வாழ்வு வாழ நினைப்பார்கள். இதனால் தான் இவர்கள் கடைசி வரை யாராலும் தூற்றப்படாமல் இருக்கிறார்கள். பெண்களால் நன்மையை மட்டும் பெறும் நிலை இருக்கும். ஆடம்பரம் மிகவும் குறைவாக இருக்கும். தேவையான இடத்தில் தேவையான நேரத்தில் மிகச் சரியாக நியாயம் பேசும் தன்மை அதிகம் காணப்படும். மிக உயர்ந்த குணங்களைக் கொண்ட இவர்கள் சீரான வாழ்வும் சிறப்பும் பெற வியாழக்கிழமை தோறும் சொக்கநாதரையும் அன்னை மீனாட்சியையும்வழிபடவேண்டும்.

இவர்கள் கலை தொடர்பான அனைத்து துறைகளிலும் இருப்பார்கள். சிந்தித்துச் செயற்படும் தன்மை உடையவர்களாக இருப்பதால் வெற்றியை எளிதில் கைப்பற்றுவார்கள். பிறரால் தொல்லை என்றால் முடிந்த வரை விலகிச் செல்லும் குணம் இருக்கும். எதையும் நன்றாக அறிந்து கொண்டபின் செயற்படுவார்கள். பெண்களால் தொந்தரவுகளைச் சந்தித்த போதிலும், வெளியுலகிற்குத் தெரியாமல் இரகசியமாக வைத்துக்கொள்வார்கள். பிறந்த திகதி எண்கள், தொழில் எண்கள் தொழில் உதவி எண்களின் ஆதிக்கம் தொடர்ச்சியாகச் செயற்படுவதால் வாழ்வில் வெற்றி என்பது இவர்களுக்கு சர்வ சாதாரணமாக அமையும். எண் ஆதிக்கம் குறைவாக இருந்தால் தலைகீழ் வாழ்க்கை அமைந்துவிடும். தொழில் உதவி எண் ஆதிக்கம் மட்டும் நன்றாக இருந்தால் மிக அதிகமான முயற்சிக்குப்பின் வெற்றிகிடைக்கும். பிறந்த திகதி எண்ணின் ஆதிக்கம் மட்டும் நன்றாக இருந்தால் வெற்றியும் தோல்வியும் பெண்களால் அமையும். பேச்சில் நிதானமும் செயலில் விவேகமும் கொண்டு செயற்பட்டால் அனைத்திலும் வெற்றி பெறுவதும் நிச்சயம். இவர்கள் வியாழக்கிழமை தோறும் பிரம்மா, கலைவாணி அன்னையை மலர்களால் அர்ச்சனை செய்து வணங்கி வந்தால் நன்மைகள் பெறலாம்.

பிறந்த திகதி 30, விதி எண் 1ஆக இருப்பவர்களுக்கு 4 ஆண்டுகள் அல்லது 6 ஆண்டுகள் நற்பலனும் 1 அல்லது 3 ஆண்டுகள் சுமாரான பலனுமாக 27 ஆண்டுகள் பலன்கள் உண்டாகும். பிறந்த திகதி 30, விதி எண் 2ஆக இருப்பவர்கள் தொடர்ந்து 12 ஆண்டுகள் மிக அதிகமான நற்பலனும் 6 ஆண்டுகள் மிதமான பலனும் மாறிமாறிக் கிடைக்கப் பெறுவர். பிறந்த திகதி 30, விதி எண் 3 ஆக இருப்பவர்கள் 30 ஆண்டுகள் நற்பலன்கள் கிடைக்கப் பெறுவர். பிறந்த திகதி 30, விதி எண் 4ஆக இருப்பவர்கள் 24 ஆண்டுகள் நற்பலன் கிடைக்கப் பெறுவர். பிறந்த திகதி 30, விதி எண் 5ஆக உள்ளவர்களுக்கு தொடர்ந்து 14 ஆண்டுகளும் பின் 3 ஆண்டுகள் இடைவெளி விட்டு 5 அல்லது 7 ஆண்டுகளும் நற்பலனைத் தரும்.

**எஸ்.என்.ஹரிஜி**

பிறந்த திகதி 30, விதி எண் 6 ஆக இருப்பவர்களுக்கு இடையூறு இல்லாத மேன்மையைச் செய்துகொண்டே இருக்கும். பிறந்த திகதி 30, விதி எண் 7ஆக இருப்பவர்களுக்கு 22 ஆண்டுகள் நற்பலனைத் தரும். பிறந்த திகதி 30, விதி எண் 8ஆக உள்ளவர்களுக்கு 19 முதல் 24 ஆண்டுகள் நற்பலனைத் தரும். பிறந்த திகதி 30, விதி எண் 9ஆக உள்ளவர்களுக்கு 27 ஆண்டுகள் நற்பலனைத் தரும்.

குறிப்பு : பிறந்த திகதி எண், விதி எண், தொழில் எண், நன்மை செய்யும் எண் ஆகியவற்றின் ஆதிக்கத்தைப் பொறுத்து தொழில் நிலைகள் மாறுபடும்.

(திங்கள் தொடரும்)


## இலங்கைத் தமிழர்கள் சுயகௌரவத்துடன் வாழக்கூடிய சூழலை ஏற்படுத்த வேண்டும்


### பாரதிய ஜனதாக் கட்சித்தலைவர் தெரிவிப்பு

இலங்கைத்தமிழர்கள் குறித்து இந்திய எதிர்க்கட்சியான பாரதீய ஜனதாக் கட்சி கருத்து வெளியிட்டுள்ளது. கட்சியின் நிறைவேற்றுக்குழுக் கூட்டத்தில் கலந்து கொண்ட போது கட்சியின்தலைவர் நிதின் கட்காரி இதனைத் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் மறுவாழ்வு மற்றும் மீள் குடியேற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டு வருவதாகவும் நாட்டின் சகல மக்களும் சுயகௌவரத்துடன் வாழக்கூடிய ஓர் சூழ்நிலை ஏற்படுத்தப்பட வேண்டுமென அவர் தெரிவித்துள்ளார்.

யுத்தம் இடம்பெற்ற காலத்தில் இடம் பெயர்ந்த தமிழ் மக்களில் ஒரு தொகுதியினர் தொடர்ந்து முகாம்களில் தங்கியிருப்பதாகக் குறிப்பிட்டுள்ளார், (ஸ்ரீ-4)





தென்மராட்சி கிழக்கு லயன்ஸ் கழகம் அண்மையில் கச்சாய் தெற்கு கலைமகள் முன்பள்ளியின் அனுசரணையுடன் மருத்துவமுகாம் ஒன்றை நடாத்தியது. இதில் டாக்டர் லயன் அருளானந்தம் எம்.ஜெ.எப். நோயாளி ஒருவரைப் பரிசோதிப்பதையும் உதவி மருத்துவமாதர் நீரிழிவு நோய்க்கான பரிசோதனையை மேற்கொள்வதையும் படங்களில் காணலாம்.

## நாட்டின் நீதித்துறையில் பாரிய மாற்றங்கள் ஏற்படுத்தப்படும்

### நீதியமைச்சர் ஹக்கீம் தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டின் நீதித்துறையில் பாரிய மாற்றங்கள் ஏற்படுத்தப்படும் என நீதி அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார். நீண்டகாலமாக நிலுவையில் இருக்கும் வழக்கு விசாரணைகள் தொடர்பான பிரச்சினைகளுக்கு விரைவில் தீர்வு காணப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.


அவர் மேலும் தெரிவிக்கையில்,

பல்வேறு காரணங்களுக்காக சில வழக்குகள் நீண்டகாலமாக விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படாமல் இருப்பதாக அவர் தெரிவித்துள்ளார். பிரதம நீதியரசர், நீதவான்கள் மற்றும் நீதி அமைச்சின் அதிகாரிகள் உள்ளிட்டோரின் ஒத்துழைப்புடன் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணமுடியும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

நீதி அமைச்சிற்காக வரவு -செலவுத்திட்டத்தில் 450 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும், இதில் 150 மில்லியன் அபிவிருத்திப் பணிகளுக்காக ஒதுக்கீடு செய்யப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

நாடு முழுவதிலும் 65 நீதிமன்றங்கள் உருவாக்கப்பட உள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

சட்டத்தரணியான ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சியில் நீதி அமைச்சுப் பொறுப்பை வகிக்க கிடைத்தமை பெரும் பாக்கியமாகக் கருதுவதாகவும் தமிழீழ விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகளினால் சமாதான முனைப்புக்கள் தோல்வியடைந்ததாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ஸ்ரீ-4)



திருநெல்வேலி இந்து தமிழ்க்கலவன் பாடசாலையில் *சர்வலோக நாயகம்* ஞாபகார்த்த நூலக அங்குரார்ப்பண நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்துகொண்ட யாழ்.மாவட்ட தொழில் திணைக்கள ஆணையாளர் க.கனகேஸ்வரன், சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட நல்லூர் கோட்டக்கல்வி பணிப்பாளர் எஸ்.மாணிக்கராசா, பாடசாலையின் அதிபர் ந.விஜயசுந்தரம் ஆகியோர் உரையாற்றுவதையும் நூலகப் பொறுப்பதிகாரத்தை சிறப்பு விருந்தினர் வழங்குவதையும் படங்களில் காணலாம். (படங்கள் எஸ்.கரன்)

# வாக்காளர் பதிவுகளை ஆராய தேர்தல் திணைக்களம் தீர்மானம்

கடந்த 2009 ஆம் ஆண்டின் வாக்காளர் இடாப்புகளை நேற்றுமுன்தினம் கொழும்புக்கு எடுத்து வருமாறு சகல மாவட்ட உதவித் தேர்தல்கள் ஆணையாளர்களுக்கும் தேர்தல் திணைக்களம் அறிவித்துள்ளது.

மாவட்ட மட்டத்தில் கடந்த 2009 ஆண்டு வாக்காளர் இடாப்பின் படி, நடை பெறவுள்ள தேர்தல்களுக்கு, வாக்காளர் தொடர்பான விபரங்களை தேர்தல்கள் ஆணையாளருக்கு அறிவிக்கும் படி மாவட்ட உதவித்தேர்தல் ஆணையாளருக்கு பணிக்கப்பட்டிருப்பதாக, திணைக்களத்தின் சிரேஷ்ட பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சி மன்றங்கள் இந்த வாரத்தில் கலைக்கப்பட்டுள்ள நிலையில், அரச சேவையாளர்கள் அஞ்சல் மூல வாக்களிப்பு மேற்கொள்ள விண்ணப்பிக்கும வகையில், வாக்காளர் இடாப்பு அரச நிலையங்களில் காட்சிப்படுத்த வேண்டியுள்ளது.

இந்நிலையில் இந்நடவடிக்கைகளை தொடாந்து, நடைபெறவுள்ள உள்ளூராட்சி தேர்தல்கள் தொடர்பான முதலாம்கட்ட நடவடிக்கைகள் குறித்து இதன் போது ஆராயப் படும் என தகவல்கள் தெரிவிக்கின்றன. (ஸ்ரீ-2)

# இந்தோனேசியக் கடலில் நிர்க்கதிக்குள்ளான மீனவர்களை அழைத்துவர நடவடிக்கை

(கொழும்பு)

இந்தோனேசியா கடலில் நிர்க்கதிக்குள்ளான இலங்கை மீனவர்களை அழைத்துவர நடவடிக்கை எடுத்துள்ளதாக அரசு தெரிவித்துள்ளது.

சங்கரபுதா-2 என்ற படகு கடந்த நவம்பர் 2ஆம் திகதி இலங்கைக் கரையிலிருந்து புறப்பட்டுச் சென்று பின்னர் தொடர்பற்றுப் போனது. அதன் பின்னர் அவர்கள் இந்தோனேசியக் கடலில் தத்தளிப்பது தொடர்பாக அண்மையில் கிடைத்த தகவலை அடுத்து அங்கு படகொன்று அனுப்பிவைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பலப்பிட்டிய பகுதி மீனவர்கள் நேற்று இது தொடர்பாக ஒரு ஆர்ப்பாட்டமொன்றிலும் ஈடுபட்டனர். (ஸ்ரீ-2)

## நாடகமும் அரங்கியலும் குழு-3

# மாணவர்களின் கண்டல் நாடகம் தேசிய மட்டத்தில் முதலிடம்

தேசியமட்ட நாடகப் போட்டியில் கண்டல் அபத்த நாடகம் முதலிடத்தைப் பெற்றுள்ளது.

குறித்த நாடகத்தின் தயாரிப்பு மற்றும் எழுத்துரு ஆகிய பணிகளை யாழ். பல்கலைக்கழக நாடகமும் அரங்கியலும் (குழு-03) வெளிவாரிப்பிரிவு இறுதி வருட மாணவர்கள் மேற்கொண்டிருந்தனர்.

மேற்படி நாடகப் போட்டியில் எஸ்.ஈஸ்வரி, என்.அஜிதா, இ.அனோஜா, ஆர்.மிபோனி, எஸ்.அனுசன், கே.திஷான், ரி.துவாரகன், எஸ்.கிளைநிதன் ஆகியோர் பங்குபற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதற்கான இசையினை யா/ ஸ்கந்தவரோதயக் கல்லூரி ஆசிரியர் எஸ்.சதீஸ், கே.கஜித்தன் ஆகியோர் வழங்கியதுடன் நெறியாள்கையினை எஸ்.ரி.குமரன், எஸ்.ரி. அருள்குமரன் ஆகியோர் மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-3-53)

# ஐ.தே.க. வில் பிளவு ஏற்படுவதை தடுக்க சிரேஷ்ட உறுப்பினர்கள் முயற்சி

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியில் பிளவு ஏற்படுவதனை தடுப்பதற்கு கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் முயற்சி மேற்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரம சிங்கவிற்கு ஆதரவான குழு மற்றும் அம்பாந்தோட்டை மாவட்ட நாடாளுமன்ற உறுப் பினர் சஜித் பிரேமதாஸவிற்கு ஆதரவான குழு என இரு பிரிவுகளாக கட்சியில் பிளவு ஏற்பட்டுள்ளதாக குறிப்பிடப்படுகிறது.

கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்களான கரு ஜெயசூரிய , ஜோசப் மைக்கல் பெரேரா, காமினி ஜயவிக்ரம பெரேரா, பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க ஆகியோர் இந்தப் பிரச்சினைக்கு தீர்வுகாணும் முனைப்புகளில் ஈடுபட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ரணில் ஆதரவு தரப்பினருடனும் சஜித் ஆதரவு தரப்பினருடனும் சிரேஷ்ட உறுப்பினர்கள் பேச்சுவார்த்தை நடத்தி இணக்கப்பாடுகளை எட்டும் முயற்சிகளில் ஈடுபடுவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

கட்சித் தலைமை பதவி குறித்து இந்தப் பேச்சுவார்த்தைகளின் போது முக்கிய கவனம் செலுத்தப்படவுள்ளது.

கட்சித் தலைமைப் பதவி தொடர்பில் வாக் கெடுப்பு நடத்தப்பட்டால் கட்சி இரண்டாக பிள வடையக் கூடிய சாத்தியம் காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஸ்ரீ-2)

# வடக்கு-கிழக்கில் நாற்பதாயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் இராணுவம் பயிர்ச்செய்கை


(கொழும்பு)

வடக்கு-கிழக்குப் பிரதேசங்களிலுள்ள 40 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் இராணுவத்தினரை பயிர்ச் செய்கையில் ஈடுபடுத்த அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

ஜனாதிபதி மற்றும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஆகியோரின் ஆலோசனையின் பேரில் இராணுவம் இந்த நடவடிக்கையில் இறங்கவுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

19786 ஏக்கரில் தானியங்களும் 7231 ஏக்கரில் நிலக்கடையும் 4709 ஏக்கரில் வெங்காயமும் 4329 ஏக்கரில் மிளகாயும் 4729 ஏக்கரில் கௌப்பியும் இராணுவத்தால் பயிரிடப்படவுள்ளதாக வட மாகாண ஆளுநர் தெரிவித்துள்ளார்.

இது தவிர விவசாயிகளிடமிருந்து உற்பத்தி செய்யப்பட்ட மரக்கறிகளை நேரடியாகக் கொள்வனவு செய்து அவற்றை குறைந்த விலையில் கொழும்பில் மக்களுக்கு விற்பனை செய்யும் திட்டத்தை இராணுவம் ஏற்கனவே ஆரம்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-4)

YOKO

நீர் இறைக்கும் இயந்திரம்

❖ ஒரு வருட உத்தரவாதம்.
❖ ஐந்து குதிரை வலு சக்தி கொண்டது.
❖ எரி பொருள் சிக்கனமானது.

இறக்குமதியாளர்கள்:
Micro Bytech International (Pvt)Ltd.
141/1,Highlevel Road,
Nugegoda.
Tel: 011-2815481

(C-3343)


# புலிகளின் தேசிய வெளிநாட்டு சொத்துக்கள் குறித்து மதிப்பீடு செய்யப்படவில்லை

## லக்ஸ்மன் ஹுலுகல்ல தெரிவிப்பு

(கொழும்பு)

விடுதலைப்புலிகளுக்குச் சொந்தமான தேசிய மற்றும் வெளிநாட்டுச் சொத்துக்கள் தொடர்பாக இதுவரை மதிப்பீட்டுகள் செய்யப் படவில்லை எனவும் மதிப்பீடு செய்யப்பட்ட பின்னர் அது நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப் படும் என தேசிய பாதுகாப்பு தொடர்பான ஊடக மத்திய நிலையத்தின் பணிப்பாளர் லக்ஸ்மன் ஹுலுகல்ல தெரிவித்துள்ளர்.

இது குறித்து எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க அண்மையில் நாடாளுமன்றத்தில் வாய்மொழிமூல பதிலை எதிர்பார்த்து கேள்வியொன்றை எழுப்பியதுடன் சபை ஒத்திவைக்கப்படும் வரை அதற்கான பதில் வழங்கப்படவில்லை .

சர்வதேச ரீதியில் புலிகளின் கப்பல்கள் போக்குவரத்தில் ஈடுபட்டு வருவதாகக் கூறிய போதிலும் அரசாங்கம் பிரின்ஸஸ் கிறிஸ்டினா என்ற சரத்குக் கப்பலை மாத்திரமே கைப்பற்றியது. (ஸ்ரீ-2)



சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாட்டில் இரண்டாம் நாள் நிகழ்வில் ***சிறுவர் இலக்கியம்*** ஆய்வரங்கில் கேணிப்பித்தன் அருளானந்தம்,கவிஞர் துரையர் ,ரூபி வலண்டினா ஆகியோர் உரையாற்றுவதையும் நிகழ்வில் கலந்துகொண்டோரில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.

# கிழக்கு மாகாணத்தில் கடும் வெள்ளம் பல்லாயிரக்கணக்கானோர் இடப்பெயர்வு

கிழக்கு மாகாணத்தில் நேற்று முன்தினம் இரவு முதல் பெய்துவரும் கடும் மழை காரணமாக ஆயிரக்கணக்கானோர் பாதிக்கப்பட்டுள்ளனர். ஆயிரக்கணக்கான குடும்பங்கள் இடம்பெயர்ந்துள்ளன. பல குடும்பங்கள் பாதுகாப்பான இடங்களுக்கு செல்ல முடியாமல் வெள்ளத்தினால் சூழப்பட்டுள்ளன.

நேற்று காலை வரை மட்டக்களப்பில் மாத்திரம் 312 மில்லிமீற்றர் வரை மழை பெய்துள்ளதாக வானிலை அவதான மையம் அறிவித்துள்ளது. மட்டக்களப்பு, திருகோணமலை மற்றும் அம்பாறை ஆகிய மாவட்டங்களில் வெள்ளம் ஏற்பட்டுள்ளது. மட்டக்களப்பு மாவட்டத்தின் வெல்லாவெளி பிரதேசத்தில் சில இடங்களில் மக்கள் வீடுகளின் கூரைகளின் மீது ஏறியுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

வெல்லாவெளி பிரதேச செயலாளர் பிரிவுகளில் உள்ள கிராமங்களில் 6 அடி வரை வெள்ளம்பாய்வதாகவும் இதனையடுத்து பொலிஸார் மக்களை மீட்பதற்காக அங்கு சென்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனை தவிர புதிய காத்தான்குடி, கிரான் செங்கலடி, வாகரை, வவுணதீவு மற்றும் களுவாஞ்சிக்குடி ஆகிய இடங்களிலும் வெள்ளத்தினால் பல்லாயிரக்கணக்கான மக்கள் இடம் பெயர்ந்துள்ளனர்.

பாண்டிருப்பு தமிழ் பாடசாலையில் மாத்திரம் சுமார் ஆயிரம் குடும்பங்கள் இடம் பெயர்ந்துள்ளதாக மட்டக்களப்பு தகவல்கள் தெரிவிக்கின்றன.

திருகோணமலையில் மூதூர் பகுதியின் சில கரையோர இடங்களில் கடல் நீர் உட் புகுந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை சம்பூரில் இருந்து இடம் பெயர்க்கப்பட்டு தற்போது கட்டை பறிச்சானில் தங்க வைக்கப்பட்டுள்ள இடம்பெயர்ந்த மக்களின் கொட்டில்கள் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டுள்ளன. இதன் காரணமாக ,அந்த மக்கள் இருக்க இடமின்றி அல்லற் படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இதில் சிறுவர்களின் நிலை பரிதாபமானது என அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அம்பாறையில் சேனநாயக்க சமுத்திரம் உச்ச மட்டத்தை அடைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-4)

## நத்தார் புதுவருடத்தை முன்னிட்ட போட்டிகளில் முதலிடம்

(கொழும்புத்துறை)

இளவாலை திருமறைக்கலாமன்றத்தின் ஏற்பாட்டில் நத்தார் புதுவருட பண்டிகையை முன்னிட்டு கடந்த முதலாம் திகதி பங்குரீதியாக நடாத்தப்பட்ட கட்டுரை, கவிதை, ஓவியம், குழுப்பாடல், நாடகம் ஆகிய போட்டிகளில் 7 பங்குகளில் இருந்து 400 இற்கும் மேற்பட்ட போட்டியாளார்கள் பங்கு பற்றினர்.

இதில் பெரியவிளான் புனித அந்தோனியார் ஆலய பங்கினர் முதலாமிடத்தையும் இளவாலை புனித யூதாததேயு ஆலய பங்கினர் இரண்டாமிடத்தையும் மாதகல் புனித தோமையார் ஆலய பங்கினர் மூன்றாமிடத்தைப் பெற்றுக்கொண்டார்கள்.

(ஸ்ரீ-3-51)

# மட்டக்களப்பில் 24 மணிநேரத்தில் 312 மி.மீற்றர் மழைவீழ்ச்சி பதிவு

(கொழும்பு)

நாட்டின் பல்வேறு இடங்களில் பெய்த மழையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த 24 மணி நேரத்தில் 312 மி.மீற்றர் மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளதாக வானிலை அவதான நிலையம் தெரிவித்துள்ளது.

மட்டக்களப்பு மாவூட்டத்தில் கடும் காற்றுடன் கூடிய மழை நிலவிவருவதால் வீடுகள் பல சேதமடைந்துள்ளதாகவும் வீதிகளில் மரங்கள் முறிந்து வீழ்ந்துள்ளதால் வீதிப் போக்குவரத்து முற்றாக பாதிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை வெல்லாவெளி பிரதேசத்தில் அமைந்துள்ள நான்கு கிராமத்து மக்கள் அதிகமாக பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அவர்களுக்கான நிவாரண உதவிகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை எனவும் மக்கள் விசனம் தெரிவித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (ஸ்ரீ-2)

# புகையிரத பயணிகளுக்கு இலவச இணையத்தள வசதி

(கொழும்பு)

புகையிரதத்தில் பயணம் செய்வோரின் நன்மை கருதி இணையத்தள வசதிகள் அறிமுகம் செய்ய புகையிரத திணைக்களம் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

முதலாம் வகுப்பில் பிரயாணம் செய்வோருக்கு இந்த வசதிகள் ஏற்படுத்தி கொடுக்கப்படவுள்ளதாக புகையிரத திட்டமிடல் பணிப்பாளர் விஜய சமரசிங்க தெரிவித்தார்.

இதற்காக அதி உயர் இணையத்தள வசதிகள்பயன்படுத்திமுதலாம்வகுப்புபயணிகள்தமது கையடக்க மற்றும் மடி கணனிகள் மூலம் இந்த இணையத்தள வசதிகளை இலவசமாக பெற முடியும் எனவும் அவர் தெரிவித்தார். (ஸ்ரீ-4)

# சப்ரகமுவ பல்கலைக்கழகம் மீண்டும் திறக்கப்படவுள்ளது

(கொழும்பு)

ஒத்திவைக்கப்பட்டிருந்த சப்ரகமுவ பல்கலைக்கழக நடவடிக்கைகள் மீண்டும் இன்று திங்கட்கிழமை ஆரம்பிக்கப்படவுள்ளன.

மூன்றுபீடங்ளையும் சேர்த்த முதலாம் ஆண்டு மாணவர்களுக்கு மட்டுமே விரிவுரைகள் இன்று முதல் ஆரம்பிக்கப்படவுள்ளதாக சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் பதில் உபவேந்தர் பேராசிரியர் எம்.எச்.எஸ் பிரியநாத் தெரிவித்தார்.

ஏனைய மாணவர்களுக்கு பல்கலைக்கழகம் ஆரம்பமாகும் தினம் பின்னர் அறிவிக்கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

(ஸ்ரீ-2)

# ஐ.நா.மனித உரிமைப் பேரவை அமர்வில் இலங்கை விவகாரம் குறித்து விவாதம்

எதிர்வரும் மார்ச் மாதம் ஜெனிவாவில் நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகளின் மனித உரிமைப் பேரவை அமர்வுகளில் இலங்கை விவகாரம் பேசப்படலாம் என தகவல் வெளியாகியுள்ளது.


இதில் இலங்கையின் தற்போதைய சூழ்நிலை குறித்து விவாதம் நடத்தப்படலாம் என தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிராக நிறைவேற்றப்பட்ட தீர்மானம் முறியடிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

ஐக்கிய நாடுகளின் நிபுணர்கள் குழுவின் அறிக்கையும் மனித உரிமைகள் பேரவை அமர்வுகளில் சமர்ப்பிக்கப்படலாம் என எதிர் பார்க்கப்படுகிறது.

இலங்கை விவகாரம் தொடர்பில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் அமெரிக்கா அழுத்தங்களை பிரயோகிக்கும் என தெரிவிக்கப்படுகிறது. (ஸ்ரீ-4)


## மரண அறிவித்தல்



### மாரிமுத்து கனகசபை

(சின்னண்ணன், சின்னத்தம்பி மெக்கானிக்- கணேசன் மோட்டோர்ஸ் மையாளர்)

யாழ்ப்பாணம் குமாரசாமி வீதி, கந்தர்மடத்தை பிறப்பிடமாகவும் ஆத்திசூடி வீதி, கந்தர்ப தை வசிப்பிடமாகவும் கொணட மாரிமுத்து கனகசபை 08.01.2011 நேற்று முன்தினம் சனிக்கிழமை காலமானார். அன்னாரின் இறுதிக்கிரியை பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

154/21, ஆத்திசூடி வீதி,
கந்தர்மடம்,
வடமேற்கு, யாழ்ப்பாணம்.

தகவல்
குடும்பத்தினர்

(3398)


செம்மணி வீதியில் உள்ள மதகருகில் அதிக பாரச் சுமையுடன் பொருட்களை ஏற்றிச் சென்ற லொறி வீதி யிலுள்ள குழி யொன்றினுள் புதைந்திருப்பதை படத்தில் காண லாம்



நெஞ்சில் உரமின்றி நேர்மைத் திறனுமின்றி
வஞ்சனை செய்வாரடி – கிளியே
வாய்ச் சொல்லில் வீரரடி ~பாரதியார்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# எந்தப் புற்றில் எந்தப் பாம்போ?

'எந்தப் புற்றில் எந்தப் பாம்பு இருக்குமோ' என்பது தமிழ்ப் பழமொழி. இந்தப் பழமொழியின் பொருள் மிகவும் கருத்துச் செறிவுடையது.

சமகாலத்தில் எங்களுக்குப் பொருந்தக் கூடியதும் இதுவே.

புற்றில் குடியிருப்பது என்ன பாம்பு என்பது தெரியாமல் இருப்பது போல, தமிழ் மக்களுக்காகப் பாடுபடுபவர்கள் யார்? பாடுபடுவது போல நடிப்பவர்கள் யார்?

நடிப்பது மட்டுமன்றி எங்களை விற்பதற்காகவே வெளிக்கிட்டவர்கள் யார் என்பதைக் கண்டு கொள்வதில் தமிழ் மக்கள் எதுவும் செய்ய முடியாதவர்களாக இருக்கின்றனர்.

இதனால் உண்மையாக – விசுவாசமாகத் தமிழ் மக்கள் மீது பற்றுக் கொண்டு செயற்படுபவர்களை உதறித் தள்ளி விட்டு நடிப்புச் சுதேசிகளை நம்மவர்கள் என்று நம்பி ஏமாறும் பரிதாபத்தில் தமிழினம் இருக்கிறது.

என்ன செய்வது! சிறுபான்மை இனங்களில் இத்தகைய பரிதாபங்கள் இருப்பது வழமை என்றாகி விட்டது.

மக்கள் தெளிவடையாதவரை இத்தகையவர்கள் கூடவே இருந்து குழி பறிப்பார்கள்.

இனத்திற்காகப் பாடுபடுவது போல பாசாங்கு செய்வார்கள். உண்மைத் தகவல்களைத் திரிவடைய வைப்பார்கள். மக்களும் அவற்றை உண்மையெனக் கருதி விடுவர்.

இத்தகைய வேதனையான நிலைமை இருக்கும் போது தமிழினம் விடிவு பெறுவது முடியாத காரியம்.

தமிழினம் தலை நிமிர்ந்து வாழ வேண்டுமாயின், முதலில் மக்களுக்குத் தெளிந்த சிந்தனை தேவை. அதே நேரம் தமிழுக்காகப் பாடுபடுகின்றவர்களும் தாங்கள் நிற்கக் கூடிய இடங்களை வெளிப்படையாகக் காட்ட வேண்டும்.

எவரும் எந்தப் பக்கத்திலும் நிற்கலாம். அவர்கள் தங்களுடைய பக்கம் இதுதான். அதற்கான காரணங்கள் இவைதான் என்பதை மக்களுக்குத் தெளிவுபடுத்துவது அவசியம்.

இதை விடுத்து உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவது பெரும் பாவம். அதனை உரியவர்கள் தயவு செய்து கைவிட்டு விட வேண்டும்.

அன்பார்ந்த மக்களே! ஒரு புற்றில் இருக்கக் கூடிய பாம்புகளும் தனித்தனி இயல்புகள் கொண்டவையாக இருக்கலாம்.

ஆகையால் பாம்புகளைத் தனித்தனியாக ஆய்வு செய்யுங்கள்.

விஷப் பாம்புகள், விளைப் பாம்புகள் இருக்கலாம். ஏன்? நல்ல பாம்புகளும் வெங்கணாந்திப் பாம்புகளும் இருக்கலாம். பாம்பை இனங்காணும் திறன் தமிழ் மக்களுக்கு இருந்தால் மட்டுமே மீட்சி.

# கொழும்பு – தூத்துக்குடி கப்பல் சேவை அடுத்த மாதம்

(கொழும்பு)

கொழும்புக்கும் தூத்துக்குடிக்கும் இடையிலான கப்பல் சேவை அடுத்த மாதம் ஆரம்பமாகும் என்று துறைமுகங்கள், நெடுஞ்சாலைகள் பிரதியமைச்சர் றோகித அபே குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

இந்தியாவின் தரப்பில் நான்கு கப்பல்களும் இலங்கையின் தரப்பில் மூன்று கப்பல்களுமாக இக்கப்பல் சேவை வாரத்தில் ஏழு நாட்களும் இடம்பெறும்.

இரு நாடுகளுக்கும் இடையிலான விமானப் பயணச் சீட்டுக்கான கட்டணத்தை விட 30 சதவீதம் குறைவான கட்டணமே இக்கப்பற் பயணத்திற்கு அறவிடப்படும் எனவும் சுமார் ஏழு மணி நேரம் பயணத் தூரம் கொண்ட இச் சேவையின் போது கப்பலிலேயே உணவும் வழங்கப்படவுள்ளது.

இதற்காகக் கொழும்புத் துறைமுகம் இம்மாத இறுதிக்குள் சுங்க மற்றும் குடிவரவுப் பணியகங்களைக் கொண்டு புதிய வசதிகளுடன் புனரமைக்கப்பட உள்ளது.

இலங்கைக் கப்பற் கூட்டுத்தாபனம் ஊடாகத் தற்போது விற்பனை செய்யப்படும் பயணச் சீட்டுக்கள் எதிர்காலத்தில் முகவர் நிறுவனங்கள் மற்றும் இணையத் தளமூடாக விற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் பயணிகள் கப்பல் சேவையை ஆரம்பிப்பதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் அலரி மாளிகையில் அண்மையில் நடைபெற்ற நிகழ்வில் கைச்சாத்திடப்பட்டது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ முன்னிலையில் இந்தியத் தூதுவர் அசோக் காந்தாவும் துறைமுகங்கள் மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் செயலாளர் சுஜாதா குரேயும் இந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டு இருந்தனர்.

கொழும்பு – தூத்துக்குடி, தலைமன்னார் – இராமேஸ்வரம் ஆகிய பயணிகள் கப்பல் சேவைகளை ஆரம்பிக்கும் வகையில் இந்த ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டுள்ள போதிலும் முதற்கட்டமாகக் கொழும்பு – தூத்துக்குடி கப்பற் சேவையே ஆரம்பிக்கப்படவுள்ளது.

அதேவேளை தலைமன்னாருக்கும் இராமேஸ்வரத்திற்கும் இடையிலான கப்பற் சேவை இரு துறைமுகங்களின் உட்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட்ட பின்னர் இவ்வாண்டு இறுதிக்குள் ஆரம்பிக்கப்படும் என்றும் துறைமுகங்கள், நெடுஞ்சாலைகள் பிரதியமைச்சர் றோகித அபே குணவர்த்தன மேலும் தெரிவித்துள்ளார். (ந-5)

# ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழு கூட்டம் மார்ச் மாதம் ஆரம்பம்!

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கூட்டத் தொடர் எதிர்வரும் மார்ச் மாதம் ஜெனீவாவில் ஆரம்பமாக உள்ளது.

இக்கூட்டத் தொடரில் இலங்கையின் தற்போதைய நிலைவரங்கள் தொடர்பான பிரேரணை ஒன்று முன்வைக்கப்படவுள்ளதாக உயர்மட்ட வட்டாரங்களை மேற்கோள் காட்டிக் கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கடந்த கூட்டத் தொடரிலும் இலங்கை தொடர்பான பிரேரணை ஒன்று சுவீடனால் முன்வைக்கப்பட்ட போது இந்தியா, சீனா, ரஷ்யா போன்ற நாடுகளின் ஆதரவுடன் இலங்கை அரசாங்கம் தோற்கடித்திருந்தது.

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் இக் கூட்டத்தொடரில் ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பான்கீ மூனால் நியமிக்கப்பட்ட நிபுணர்கள் குழுவின் அறிக்கையும் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

அதேவேளை ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணைக் குழுவின் இக்கூட்டத்தொடரில் இலங்கை அரசாங்கம் தொடர்பாக அமெரிக்கா அதிக அழுத்தங்களைக் கொடுக்கலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. (ந-5)

# நாடும் நடப்பும்

## மாதங்கம்

அன்னம்மா தங்கமென விளை நிலமும்
தந்தங்கள் தரித்த பெரு மாதங்கக் காடும்
பாசறை யென்று பறை சாற்றி
நிந்தகம் செய்து வினை முடித்தீர்
புதுப் புனைசாசனத் தால் மாதங்க நிழல்களெல்லாம்
மாதவத் தோன்திருச் சிலையை சேமமுடன் செப்பமிட்டு
இல்பூர் வீகச்-செருக் கதற்கு தார்மீக உடைதரித்து
குந்தகம் நினைத்து கந்தகம் பரவியே கருவறுத்தீர்
பொலியு மோபுதுப் பொலிவு
பொலியும் புதுப்புனலாய் பாதகமே மிகுசாதகமாய்

அறியாதவன்

# இராணுவத்தினரிடம் சரணடைந்த எனது கணவர் குறித்து தகவலில்லை

## புலிகளின் முன்னாள் தளபதியின் மனைவி சாட்சியம்

விடுதலைப்புலிகள் அமைப்பின் மன்னார் மாவட்ட தளபதியாக இருந்த யான் என அழைக்கப்படும் அந்தோனி இராயப்பு (வயது40) கடந்த 18.08. 2009 இல் (முல்லைத்தீவில் வைத்து இராணுவத்தினரிடமிருந்து சரணடைந்ததாகவும் அதனைத்தான் நேரில் பார்த்ததாகவும் ஆனால் தற்போது அவர் எங்குள்ளார் என்று தெரியவில்லையெனவும் அவரது மனைவி ஆர். விரோனியா கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு முன்னிலையில் சாட்சியமளித்துள்ளார்.

மன்னாரில் நேற்று நடைபெற்ற கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு அமர்வில் சாட்சியமளிக்கும்போதே அவர் இவ்வாறு கூறினார். அவர் அங்கு தொடர்ந்து சாட்சியமளிக்கையில்.

யுத்தம் காரணமாக கடந்த 16.08.2009 இல் முள்ளிவாய்க்காலிலிருந்து முல்லைத்தீவு நோக்கி எனது கணவருடன் நானும் 3 பிள்ளைகளும் வந்தபோது சன நெரிசலில் எனது கணவரை தவற விட்டேன்.

இருப்பினும் 17.08.2009 இல் எங்களது இருப்பிடம் தேடி எனது கணவர் வந்தடைந்தார். கடந்த 18.08.2009 இல் கத்தோலிக்க அருட்தந்தை பிரான்சிஸ் ஜோசப்புடன் எனது கணவரும் விடுதலைப்புலிகளின் முக்கிய உறுப்பினர்களான இளம்பரிதி , வேலவன், பாபு, ஈழவன், ரூபன், குமரன்ஆகியோர் கள் இராணுவத்தினரிடம் சரணடைந்தனர்.

இவர்கள் சரணடைவதை நான் நேரில் பார்த்தேன். சரணடைந்த இவர்கள் பேருந்து ஒன்றில் ஏற்றப்பட்டார்கள். இதன் பின்னர் அவர்கள் தொடர்பில் இதுவரையில் எந்தவித தகவலும் இல்லை என்றார். தனது கணவரை மீட்டுத் தருமாறு அந்தோனி இராயப்புவின் மனைவி கோரிக்கை விடுத்தார். (ஸ்ரீ-2)

# விளையாட்டுப்போட்டி

(கொழும்புத்துறை)

பெரியவிளான் புனித அந்தோனியார் ஆலய விளையாட்டுப்போட்டி எதிர்வரும் 15ஆம்திகதி நண்பகல் 1 மணிக்கு பெரியவிளான் ப்ங்குத்தந்தை ஏ.புனித குமார்தலைமையில் பெரியவிளான் விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இதில் பிரதம விருந்தினராக இளவாலை புனித ஹென்றி அரசர் கல்லூரி அதிபர் ஏ.ஜெ.ஜேசுதாஸ், சிறப்பு விருந்தினராக பண்டத்தரிப்பு பனை தென்னை வள பொதுமுகாமையாளர் கி.குணரத்தினம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளதாக விளையாட்டுத் துறைப் பொறுப்பாளர் செ.பி.பியன்வெனு தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-3-51)

# சுவாமி விவேகானந்தரின் அறிவுரைகள்



மெத்தப் படித்தவர்களாக உங்களைக் கருதிக் கொண்டிருக்கிறீர்கள். நீங்கள் கற்ற இலட்சணம் தான் என்ன? மாற்றான் மொழியில் மற்றவர் கருத்துக்களை மனப்பாடம் செய்து மூளையில் அவற்றைத் திணித்து வைத்துப் பிறகு ஒரு சில பட்டங்களைப் பெற்றதனால் மெத்தப் படித்தவர்கள் என்ற எண்ணம் உங்களுக்கு! சீச்சீ! என்னமானக்கேடு! இதுவா கல்வி? நீ கற்றதன் நோக்கம் என்ன? உன் கல்விக்கான குறிக்கோள் எது? ஒரு குமாஸ்தாவாக வருவதா? அல்லது பொய் , புனை, சுருட்டைத்தேடி ஓடும் ஒரு வக்கீலாகவா? மிதமிஞ்சிப் போனால் ஓர் உதவி நீதிபதி பதவி? இவ்வளவுதானே? நீங்கள் தேடியோடும் இந்த வேலை உங்களுக்கும் உங்கள் நாட்டிற்கும் எந்த வகையில் பயன் விளைவிக்கப் போகிறது?

# ஒரே மாதத்தில் பெண்ணாக மாறிய ஆண் குழந்தை

(லண்டன்)

ஒரு குறிப்பிட்ட வயதுக்கு பின் திரு நங்கைகளாக மாறுவர்கள் குறித்து நாம் கேள்விப்பட்டிருக்கிறோம். ஆனால் பிறந்து ஒரு மாதமேயான ஆண் குழந்தை பெண் குழந்தையாக மாறிய விசித்திரத்தைக் கேட்டதுண்டா? தென் ஆபிரிக்காவில் தான் இந்த விசித்திர சம்பவம் இடம்பெற்றுள்ளது.

தென் ஆபிரிக்காவைச் சேர்ந்தவர்கள் கென்னத்-மாடெலிஷியா தம்பதியருக்கு கடந்தாண்டு ஒரு ஆண் குழந்தை பிறந்தது. குழந்தை பிறந்த போதே அது ஆண் குழந்தை தான் என்று டாக்டர்களும் உறுதிப்படுத்தியிருந்தனர். அக் குழந்தைக்கு கென்னி ஹிஸ் ஹாக் என்று கென்னத் தம்பதியர் பெயரிட் டனர்.

பிறந்து 4வாரங்களான நிலையில் கென்னயின் பிறப்புறுப்பில் மாற்றங்கள் காணப்பட்டன. இதனால் கவலையடைந்த பெற்றோர் கென்னியை டாக்டரிடம் காண்பித்தனர். கென்னியை பரிசோதித்த டாக்டர் கென்னி பெண் குழந்தையாக மாறி வருவதாகத் தெரிவித்தார். கென்னியின் உடலில் நொதியின் பற்றாக்குறையால் ஓமோன்கள் வழக்கத்துக்கு மாறாக சுரக்க ஆரம்பித்ததே இதற்குக் காரணம் என்பது பரிசோதனையில் தெரிய வந்தது. அதனால் கென்னிக்கு இது தொடர்பாக ஓர் அறுவை சிகிச்சை ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. கென்னியின் பெயரை மெக்கென்சி என்று பெற்றோர் மாற்றியுள்ளனர். (ஸ்ரீ-2)




# இத்தாலியில் வானிலிருந்து மடிந்து விழுந்த புறாக்கள்


(ரோம்)

அமெரிக்காவின் ஆர்கன் சர்ஸ் , டெக்காஸ் மற்றும் சுவீடன் , நியூசிலாந்து ஆகிய நாடுகளில் வானில் இருந்து இறந்த நிலையில் பறவைகள் கீழே விழுந்தது ஆச்சரிய அலைகளை ஏற்படுத்தின.

இவை வானில் இருந்து விழுந்தது எப்படி? என்ற ஆராய்ச்சி நடந்து வருகிறது. இந்த நிலையில் இத்தாலியில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட புள்ளி வடிவிலான புறாக்கள் வானில் இருந்து இறந்து விழுந்து பரபரப்பை ஏற்படுத்தி உள்ளன.வடக்கு இத்தாலியில் உள்ள பாயன் ஷா நகரில் கடந்த 5 நாட்களாக இச்சம்பவம் நடக்கிறது. கடந்த 7 ஆம் திகதி மட்டும் 300 க்கும் மேற்பட்ட புறாக்களின் உடல்கள் கண்டெடுக்கப்பட்டன.

புறாக்கள் மட்டுமன்றி பலதரப்பட்ட பறவைகளும் மடிந்து கீழே விழுகின்றன. அவற்றின் அலகுகள் நீலநிறத்திற்கு மாறியுள்ளன. இது காற்றில் ஏற்பட்டுள்ள ஒட்சிசன் குறைபாடு காரணமாக , காற்றில் விசமாக மாறியதால் இறந்திருக்கலாம் எனக் கருதப்படுகிறது.

ஏனெனில், இறந்து விழுந்த புறாக்களில் பெரும்பாலானவை பாயன்ஷாவில் தொழிற்



சாலை நிறைந்த பகுதியை ஒட்டியுள்ள மரங்கள் மற்றும் வீதியோரங்களில் கண்டெடுக்கப் பட்டன.

இது தொழிற்சாலை கழிவுகளால் காற்றில் ஏற்படும் மாசு உயிரினங்களை அழிவுப்பாதைக்கு அழைத்துச் செல்வதை காட்டுகிறது. எனவே காற்றில் மாசுபடாமல் பாதுகாக்க வேண்டியது அவசியம் என இயற்கை ஆர்வலர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர். (ஸ்ரீ-2)

## வறுமை ஒழிப்பில் இந்தியா -அமெ. இணைந்து செயற்பட முடிவு

ஆபிரிக்கா கண்டத்தில் உள்ள நாடுகளின் வறுமையைப் போக்குவதில் இந்தியா - அமெரிக்கா இணைந்து செயற்படவுள்ளன. இருநாடுகளும் இணைந்து ஆபிரிக்கா கண்டத்திலுள்ள நாடுகளில் காணப்படும் பசி மற்றும் வறுமை நிலையைப் போக்குவதற்கும் நவீன தொழில்நுட்பம் மூலம் விவசாய உற்பத்தியை அதிகரிக்கவும் நடவடிக்கை எடுக்கவுள்ளன.

கடந்த நவம்பர் மாதம் அமெரிக்க ஜனாதிபதி இந்திய சுற்றுப்பயணத்தின்போது ஜனாதிபதி ஒபாமா மற்றும் பிரதமர் மன்மோகன் சிங் இருவரும்ஆபிரிக்கநாடுகளில் இணைந்து செயற்படுவது என அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-4)

# ஆப்கானிஸ்தானில் தற்கொலை குண்டுத்தாக்குதலில் 17 பேர் பலி

(காபூல்)

ஆப்கானிஸ்தானில் நடந்த தற்கொலைக் குண்டுத்தாக்குதலில் 17பேர் பலியானார்கள். ஆப்கானிஸ்தானில் தெற்குப் பகுதியில் கந்தகார் மாகாணம் உள்ளது. தலிபான் தீவிரவாத இயக்கம் உரு வான இப்பகுதியில் 30ஆயிரம் அமெரிக்க இராணுவ வீரர்கள் குவிக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் தலிபான் தீவிரவாதிகளுடன் கடந்த 10 ஆண்டுகளாகப் போராடி வருகின்றனர். இருந்தும் அங்கு தலிபான்களை முற்றிலும் ஒடுக்கமுடியவில்லை. தினமும் வன்முறை சம்பவங்கள் நடைபெற்று வருகின்றன.

இந்த நிலையில் நேற்றுமுன்தினம் ஸ்பின் போல்டாக் நகரில் தீவிரவாதிகள் தற்கொலைத் குண்டுத்தாக்குதல் நடத்தினார்கள். மதியம் அங்குள்ள பொது கழிவறையில் இந்தத் தாக்குதல் நடந்தது. அங்கு கழிவறையை சுத்தம் செய்யும் துப்புரவு தொழிலாளி போன்று வந்த தலிபான் தற்கொலை படை தீவிரவாதி தனது உடலில் கட்டியிருந்த குண்டை வெடிக்க செய்தான். அப்போது பலத்த சத்தத்துடன் குண்டுவெடித்தது.

அங்கு கரும்புகையுடன் தீப்பிடித்து எரிந்தது. இச்சம்பவத்தில் 17 பேர் உடல் சிதறிப் பலியானார்கள். 23பேர் படுகாயமடைந்தனர். அவர்கள் அனைவரும் இங்குள்ள ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

பொலிஸ் கமாண்டருக்கு குறிவைத்து தற்கொலை தாக்குதல் நடந்த ஸ்பின் போல் பாக் நகரம் பாகிஸ்தான் எல்லையில் உள்ளது.

இந்தக் கழிவறை நகரின் மையப் பகுதியில் சந்தை அருகே உள்ளது. இந்த கழிவறைக்குள் பொலிஸ் கமாண்டர் ஒருவர் இருந்ததை தீவிரவாதிகள் பார்த்துவிட்டனர்.

எனவே, அவரை குறிவைத்து இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது. அதில் அவரும் பலியானார். மேலும், கந்தகாரில் வீதியோரம் வைக்கப்பட்டிருந்த குண்டு வெடித்ததில் வெளிநாட்டு இராணுவ வீரர்கள் 3பேர் பலியானார்கள்.

மேலும் கந்தகாரில் மர்மநபர் சுட்டதில் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரும் பலியானார். தற்கொலைக் குண்டுத்தாக்குதல் நடந்த ஸ்பின் போல்டாக் நகரில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)

# மர்மநபரின் துப்பாக்கிச் சூட்டில் அமெரிக்க நீதிபதி உயிரிழப்பு

## எம்.பி. உட்பட 12 பேர் காயம்

(வோஷிங்டன்)


அமெரிக்காவில் உள்ள நவீன சந்தை அருகே நடந்த கூட்டத்தில் மர்ம நபர் ஒருவர் நுழைந்து கூட்டத்தினர் மீது கைத் துப்பாக்கியால் சரமாரியாக சுட்டதில் மாவட்ட நீதிபதி உட்பட 6 பேர் கொல்லப்பட்டனர். எம்.பி ஒருவர் உட்பட 12 பேர் காயமுற்றனர்.

அரிசோனா மாகாணத்தில் உள்ள டக்சன் பகுதியில் ஒரு புகழ்பெற்ற நவீன சந்தை அருகே இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

அமெரிக்கா முழுவதும் அதிர்ச்சியை ஏற்படுத்திய சம்பவம் குறித்து விசாரணை நடத்த எப்.பி.ஐ உயர் அதிகாரிகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். துப்பாக்கிச் சூடு சம்பவம் நடந்த சில நிமிடங்களில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். இவரது பெயர் ஜார் டுலி (வயது - 22) என்றும் தெரியவந்துள்ளது.

இவரது கைத்துப்பாக்கி ஒன்று கைப்பற்றப்பட்டுள்ளது. துப்பாக்கியால் சுட்டதன் நோக்கம் என்ன என்பது குறித்து பொலிஸார் விசாரித்து வருகின்றனர். இச்சம்பவத்திற்கு அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா வருத்தமும் கண்ட னமும் தெரிவித்துள்ளதோடு உயர் அதிகாரி களை விசாரணை நடத்த உத்தர விட்டுள்ளார். (ஸ்ரீ-4)

# கௌதமாலாவில் இடம்பெற்ற பஸ் விபத்தில் 14பேர் பலி



கௌதமாலாவில் இடம்பெற்ற பேருந்து விபத்தில் 14 பேர் கொல்லப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. கௌதமாலாவின் மேற்குப் பகுதியில் இப் பேருந்து விபத்து இடம்பெற்றுள்ளதாகக் குறறிப்பிடப்படுகிறது.

இந்த விபத்தில் மேலும் 25 பேர் காயமடைந்துள்ளதாகவும் சம்பவத்தில் உயிரிழந்த மற்றும் காயமடைந்த அனைவரும் முன் னாள் துணை இராணுவக்குழு உறுப்பினர்கள் எனவும் தெரிவிக்கப் படுகிறது.

சம்பளம் பெற்றுக்கொள்வதற்காக கிரா மத்திலிருந்து நகரத்தை நோக்கிச் சென்று கொண்டிருந்த பேருந்தே இவ்வாறு விபத்துக்குள்ளாகியது. கௌதமாலாவின் மலைப் பாங்கான பிரதேசங்களில் அடிக்கடி இவ்வாறான பேருந்து விபத்துக்கள் இடம்பெறுகின்றமை வழமையாகும். சாரதி மிகவும் வேகமாக பேருந்தை செலுத்தியதாகவும் வளைவு ஒன்றில் பேருந்து கட்டுப்பாட்டை இழந்து பாதாளத்தில் வீழ்ந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

காயமடைந்தவர்கள் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருவதாகக் குறிப்பிடப் படுகிறது. (ஸ்ரீ-2)

# கணனியை 20மடங்கு வேகமாக இயங்க செய்யும் நுண்கருவி கண்டுபிடிப்பு

## பிரித்தானிய விஞ்ஞானிகள் சாதனை

கணனியை 20 மடங்கு வேகமாக இயங்கச் செய்யும் நுண்கருவியை (சிப்செட்) பிரித்தானிய விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.கணனியின் வேகத்தை பன்மடங்கு அதிகரிப்பது குறித்து பிரித்தானியாவை சேர்ந்த கிளாஸ்கோ பல்கலைக்கழக விஞ்ஞானிகளும் அமெரிக்காவிலுள்ள மாசாசூசெட் பல்கலைக்கழக விஞ்ஞானிகளும் இணைந்து ஆய்வு மேற்கொண்டனர்.

இதில் தற்போதுள்ள நுண்கருவிகளை விட , 20 மடங்கு அதி வேகத்தில் கணனியை இயங்கச் செய்யும் வல்லமை படைத்த புதிய நுண்கருவியைக் கண்டுபிடித்துள்ளனர்.

இதுகுறித்து, ஆய்வுக்குத் தலைமை வகித்த கிளாஸ்கோ பல்கலைக்கழக பேராசிரியர் வான்டர்பவ்டே கூறியதாவது , தற்போதுள்ள கணனிகளில் பயன்படுத்தப்படும் 'புரோசசர்' , உள்ள நுண்கருவிகள் இரண்டு , நான்கு அல்லது 16 வேலைகளை ஒரே நேரத்தில் செய்யும் திறன் படைத்தது.

ஆனால், புதிய நுண்கருவி ஆயிரம் செயற்பாடுகளை தனித்தனியே செய்யும வல்லமை படைத்தது.இந்த நுண்கருவி பொருத்தப்பட்ட 'புரோசசர்' ஆய்வக சோதனையில், ஒருவினாடியில் ஐந்து ஜிகாபைட் (ஜி.பி) தகவல்களை பரிமாறும் திறனை வெளிப்படுத்தியது.

சாதாரண நுண்கருவிகள் அடங்கிய 'புரோசசரை' விட இந்தப் புதிய நுண்கருவி பொருத்தப்பட்ட 'புரோசசர்' கணனி 20 மடங்கு அதிக வேகத்தில் இயங்க செய்தது.

இந்த நுண்கருவி சந்தைப்படுத்தப்பட்டால், கணனியைப் பயன்படுத்தும் போது ஏற்படும் கால தாமதங்கள் தவிர்க்கப்படும். மேலும் சாதாரண நுண்கருவிகளை விட இந்த நுண்கருவி,குறைந்த மின்சாரத்தை நுகர்வதால் சுற்றுச்சூழலுக்கும் மிக உகந்ததாக அமையும்.அடுத்த சில ஆண்டுகளில் இந்த நுண்கருவி சந்தைப்படுத்தப்படும் என வான்டர்பவ்டே தெரிவித்தார். (ஸ்ரீ-2)

# உதைபந்தாட்டச் சுற்றுத் தொடரில் பருத்தித்துறை லீக் சம்பியன்

(கரவெட்டி)

அகில இலங்கை ரீதியில் நடைபெற்ற உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் சம்பியனானது.

இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தில் அங்கம் வகிக்கும் 45 லீக் அணிகளுக்கிடையில் நடைபெற்ற உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டி நேற்றுப் பிற்பகல் 4 மணிக்கு கொழும்பு சிற்றி லீக் மைதானத்தில் நடைபெற்றது.

இப்போட்டியில் பருத்தித்துறை லீக் அணியும் கொழும்பு சிவில் பாதுகாப்பு லீக் அணியும் மோதிக் கொண்டன.

போட்டியின் முதலாவது பாதி ஆட்டத்தின் இருபதாவது நிமிடத்தில் பருத்தித்துறை லீக் அணியைச் சேர்ந்த எம்.பிறேம்குமார் ஒரு கோலினை அடித்து அணியின் சிறப்பான நிலையை வெளிப்படுத்தியதோடு தொடர்ந்து போட்டியின் 32வது நிமிடத்தில் இரண்டாவது கோல் அடித்தார்.

இதன் மூலம் போட்டியில் 2:0 என்ற கணக்கில் பருத்தித்துறை லீக் அணி முன்னணி வகித்தது.

இரண்டாவது பாதி ஆட்டம் ஆரம்பித்து பத்தாவது நிமிடத்தில் பருத்தித்துறை லீக் அணியைச் சேர்ந்த சாரங்கன் ஒரு கோலினை அடித்தார்.

பதிலாக 35வது நிமிடத்தில் கொழும்பு சிவில் பாதுகாப்பு லீக் அணியினர் ஒரு கோலினை அடித்துப் போட்டியை நிறைவு செய்தனர்.

இப்போட்டியில் பருத்தித்துறை லீக் அணி 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றியைத் தனதாக்கிச் சாதனை படைத்தது.

போட்டியில் வெற்றி பெற்ற பருத்தித்துறை லீக் அணிக்கு வெற்றிக் கேடயமும் ஒரு இலட்சம் ரூபாய் பணப் பரிசும் வழங்கப்பட்டது.

நடைபெற்ற லீக் போட்டித் தொடர்களில் பருத்தித்துறை லீக் அணியைச் சேர்ந்த எம்.பிறேம்குமார் 16 கோல்களை அடித்து அசத்தினார்.

வெற்றி பெற்ற வீரர்களை வரவேற்கும் நிகழ்வு இன்று காலை 10 மணிக்குப் பருத்தித்துறையில் நடைபெறும். (5,7,24)

# இரண்டாம் நாள் ஏலத்திலும் கங்குலி, ஜெயசூர்யா அவுட்

நான்காவது ஐ.பி.எல் தொடருக்கான இரண்டாவது நாள் ஏலத்திலும் கங்குலி தேர்வு செய்யப்படாததால் கங்குலி பங்கேற்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

நான்காவது ஐ.பி.எல் தொடர் எதிர்வரும் ஏப்ரல் 8ஆம் திகதி ஆரம்பமாகிறது. இதில் பங்கேற்கும் வீரர்களுக்கான ஏலம் கடந்த இரண்டு நாட்களாகப் பெங்களூரில் நடந்தது.

முதல் நாள் ஏலத்தில் இந்தியாவின் காம்பீர் அதிகபட்சமாக இலங்கை ரூபாயில் 26.6 கோடிக்கு ஏலம் போனார். நேற்று அவுஸ்திரேலியாவின் அறிமுகமில்லாத இளம் சகல துறை வீரர் டேனியல் கிறிஸ்ரியனுக்கு (27) பலத்த போட்டி காணப்பட்டது.

அவுஸ்திரேலிய அணிக்காக 3 இருபது-20 போட்டிகளில் பங்கேற்றுள்ள இவர் சிறப்பான களத்தடுப்பாளர். இவரைத் தட்டிச் செல்லக் கொச்சி, டெக்கான் அணிகள் மாறி மாறி ஏலத் தொகையை அதிகரித்துக் கொண்டே சென்றனர்.

முடிபில் 10.1 கோடி ரூபாய் கொடுத்து இவரை டெக்கான் அணி தட்டிச் சென்றது. முதலில் கிறிஸ்ரியனுக்கு அடிப்படை விலையாக 56 இலட்சம் மட்டுமே இருந்தது.

**கங்குலி பரிதாபம்:**

நேற்றைய ஏலத்தின் முடிபில் 2வது சுற்றில் 10 அணிகளின் உரிமையாளர்களின் விருப்பத்தின் பேரில் 28 வீரர்கள் தேர்வு செய்யப்பட்டனர். இதிலும் கங்குலி இடம்பெறவில்லை. இதையடுத்து ஐ.பி.எல் போட்டிகளில் கங்குலியின் பங்கேற்பு முடிபுக்கு வந்துள்ளது. இதே போல ஜெயசூர்யா, ஹைடின், லாரா, பௌச்சர், சுவான் ஆகியோர் 2வது சுற்று ஏலத்தில் இடம்பெறாதமை குறிப்பிடத்தக்கதாகும்.

# ஒரே ஒரு 'இருபது-20' போட்டியில் தென்னாபிரிக்காவை வீழ்த்தியது இந்தியா

ரோகித் சர்மா, சுரேஷ் ரெய்னாவின் அதிரடியான ஆட்டம் கைகொடுக்க ஒரே ஒரு 'இருபது-20' போட்டிகளில் இந்திய அணி 21 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தென்னாபிரிக்க அணியை வீழ்த்தியது.

தென்னாபிரிக்காவுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள இந்திய அணி 3 டெஸ்ட், ஒரே ஒரு 'இருபது-20', 5 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடுகின்றது.

இதில் டெஸ்ட் தொடர் சமனிலையான நிலையில் ஒரே ஒரு 'இருபது-20' போட்டி நேற்று டர்பனில் நடைபெற்றது.

இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி ரோகித் சர்மா – ரெய்னாவின் அதிரடி ஆட்டம் கைகொடுக்க நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் 6 விக்கெட்டுக்களை இழந்து 168 ஓட்டங்களைக் குவித்தது.

இதில் ரோகித் சர்மா 34 பந்துகளில் (5 பவுண்டரிகள், 2 சிக்ஸர்கள் உட்பட) 53 ஓட்டங்களையும் சுரேஷ் ரெய்னா 23 பந்துகளில் (2 பவுண்டரிகள், 3 சிக்ஸர்கள் உட்பட) 41 ஓட்டங்களையும் விராட் ஹோலி 19 பந்துகளில் (5 பவுண்டரிகள் உட்பட) 28 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்து வீச்சில் திரோன் 2 விக்கெட்டுக்களையும் பார்னல், போத்தா, டுமினி ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு 169 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட்டுக்களை இழந்து 147 ஓட்டங்களை மாத்திரம் எடுத்து 21 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தது.

இதில் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் வான் வைக் 39 பந்துகளில் (5 பவுண்டரிகள், 5 சிக்ஸர்கள் அடங்கலாக) 67 ஓட்டங்களையும் அணித் தலைவர் ஜெகான் போத்தா 25 ஓட்டங்களையும் டிவில்லியர்ஸ், பார்னல் ஆகியோர் தலா 14 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்து வீச்சில் ஆஷிஸ் நெகரா, யூசுப் பதான் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் பிரவீன் குமார், முனாப் பட்டேல், அஷ்வின், யுவராஜ் சிங் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இப்போட்டியில் இந்திய அணியின் வெற்றிக்கு அரைச் சதமடித்து அசத்திய ரோகித் சர்மா ஆட்ட நாயகனாகத் தெரிவானார்.

# முதலாவது டெஸ்டில் பாகிஸ்தான் வெற்றி; சொந்த மண்ணில் நியூசிலாந்து பரிதாபம்

(ஹமில்டன்)

அப்துர் றீமனின் திருப்பு முனையான பந்து வீச்சின் மூலம் பாகிஸ்தான் அணி முதலாவது டெஸ்டில் 10 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் நியூசிலாந்து அணியை வீழ்த்தியது.

நியூசிலாந்திற்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள பாகிஸ்தான் அணி 3 இருபது-20, 2 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடுகின்றது.

இதில் 'இருபது-20' தொடரில் நியூசிலாந்து அணி 2:1 என்ற கணக்கில் வெற்றி பெற்றது.

இந்நிலையில் இரு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் முதலாவது போட்டி கடந்த 7ஆம் திகதி ஹமில்டனில் ஆரம்பமானது.

இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற பாகிஸ்தான் அணித் தலைவர் மிஸ்பா உல் ஹக் முதலில் களத் தடுப்பைத் தீர்மானித்தார்.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணி முதலாவது இன்னிங்ஸில் சகல விக்கெட்டுக்களையுமிழந்து 275 ஓட்டங்களை எடுத்தது.

தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி நேற்று முன்தினம் இரண்டாம் நாள் ஆட்ட நேர முடிவில் அதன் முதலாவது இன்னிங்ஸில் 4 விக்கெட்டுக்களையிழந்து 235 ஓட்டங்களை எடுத்தது.

இந்நிலையில் மூன்றாம் நாளான நேற்று தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி முதலாவது இன்னிங்ஸில் சகல விக்கெட்டுக்களையுமிழந்து 367 ஓட்டங்களை எடுத்தது.

இதில் அசாட் சாபிக் 202 பந்துகளில் (14 பவுண்டரிகள் உட்பட) 83 ஓட்டங்களையும் அணித் தலைவர் மிஸ்பா உல் ஹக் 62 ஓட்டங்களையும் தௌபிக் உமர் 54 ஓட்டங்களையும் அட்னன் அக்மல் 44 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்து வீச்சில் ஆர்னல் 4 விக்கெட்டுக்களையும் மார்டீன் 3, சௌத்தி 2 விக்கெட்டுக்களையும் விக்டோரி ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இதன் மூலம் முதலாவது இன்னிங்ஸில் 92 ஓட்டங்கள் வித்தியாசத்தில் பின்னிலையில் இருந்த நியூசிலாந்து அணி இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடி 110 ஓட்டங்களை மாத்திரம் எடுத்துச் சகல விக்கெட்டுக்களையுமிழந்தது.

இதில் மக்குலம் 35 ஓட்டங்களையும் சௌத்தி 17, யங் 12, குப்தில் 11 ஓட்டங்களையும் அதிக பட்சமாக எடுத்தனர்.

பந்து வீச்சில் உமர் குல், அப்துர் றீமான், வாகாப் றியாஸ் ஆகியோர் தலா 3 விக்கெட்டுக்களைச் சாய்த்தனர்.



அப்துர் றீமான்

இந்நிலையில் 19 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி இரண்டாவது இன்னிங்ஸில் விக்கெட் இழப்பின்றி 21 ஓட்டங்களை எடுத்து 10 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இதில் தௌபிக் உமர் 12, மொகமட் ஹபீஸ் 9 ஓட்டங்களை ஆட்டமிழக்காமல் எடுத்தனர்.


இப்போட்டி மூன்று நாட்களுடன் முடிவடைந்தமை குறிப்பிடத்தக்கது.

இவ்வெற்றியின் மூலம் பாகிஸ்தான் அணி 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் 1:0 என்ற கணக்கில் முன்னிலையிலுள்ளது.

இப்போட்டியில் இரண்டு இன்னிங்ஸிலுமாக மொத்தம் 6 விக்கெட்டுக்களை வீழ்த்திப் பாகிஸ்தான் அணியின் வெற்றிக்குத் திருப்பு முனை அமைத்த அப்துர் றீமான் ஆட்ட நாயகனாகத் தெரிவானார்.


Jaffna Technical Institute
Regd.No:15251
ACCA

English Courses
- Spoken English & Grammer
- Preparatory Course for G.C.E.(O/L)
- Preparatory Course for English Medium Students
- Preparatory Course for Higher Studies
- Preparatory Course for General English G.C.E.(A/L)
- Preparation for Cambridge ESOL Exams (Starters , Movers ,Flyers)
- IELTS
- TOEFL



Computer Courses
- Diploma in Ms-Office
- Diploma in DTP
- Diploma in Computerized Accounting
- Diploma in Internet Technology
- Diploma in Computer Programming

PROFESSIONAL COURSES பிரிவு II

நிதி ,கணக்கீடு முகாமைத்துவ வலையமைப்புடன் நாமும் இணைவோம்
ACCA
To your future in Finance & Accounting

வங்கித்துறை உத்தியோகத்தர்களுக்கான GROUP CLASSES
CBF, DBF
(IBSL இன் அங்கீகாரம் பெற்ற கற்கைநெறி)
- உத்தியோகத்தர்களின் வசதிக்கேற்ப நேர அட்டவணை
- அனைத்து பாடங்களுக்குரிய விரிவுரைகளும் ஒழுங்கு செய்து தரப்படும்.

Industrial Courses with Training
- Radio & TV Repairing
- Refrigeration & Air Conditioning
- Electronic Classes
- Mobile Phone Repairing

(C-2051)

புதிய பிரிவுகளிற்கான பதிவுகள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன

Interested?Talk to Us! Our friendly Staff in Jaffna will be happy to answer your questions.
Call Shiyamala or Thushanthiny on 0215670345,
E-mail:jtiedu@gmail.com or
Visit our Office at No.46,Clock Tower Road,Jaffna.

Branches

| Jaffna Technical Institute | Jaffna Technical Institute | Jaffna Technical Institute |
|---|---|---|
| NO.92/1,Sir Pon.Rama -nathan Rd, Thirunelvely, Jaffna. 0777111205 | Chankaththanai, Chavakachcheri. 0773358814 | Nugavil, Karaveddy South, karaveddy, 0776258034 |

Jaffna Technical Institute
No.46,மணிக்கூட்டு வீதி,(Beacon Tution முன்பாக)
யாழ்ப்பாணம்.
E-mail:jtiedu@gmail.com, Website:www.accaglobal.com

# கற்றல் உபகரணம் வழங்கும் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்.எயிட் நிறுவனம் புன்னாலைக்கட்டுவன் அ.த.க.பாடசாலையின் வறிய மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள், காலணிகள் வழங்கும் நிகழ்வு இன்று நண்பகல் 12 மணிக்கு பாடசாலை அதிபர் ரீ.லோகநாதன் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மத்திய கல்லூரியின் ஓய்வுபெற்ற ஆரம்பப் பிரிவு அதிபர் எஸ்.தியாகராஜாவும் சிறப்பு விருந்தினராக சமூகசேவகரும் வர்த்தகருமான இமானுவேல் றொஷான் சாந்தகுமார் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (ந-7)

# மணிவிழா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியல் கல்லூரியின் அபிவிருத்திக்கும் பௌதிக வள அபிவிருத்திக்கும் கடந்த பத்து வருடங்களாக சிறப்பாக பணியாற்றிய தேசிய கல்வி நிறுவகத்தின் நிறுவன அபிவிருத்திப் பிரிவுப் பணிப்பாளர் திருமதி லிலானி அமரசிங்கவின் மணிவிழா நிகழ்வுகள் நாளை பிற்பகல் 2.00 மணிக்கு யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதி எஸ்.கே.யோகநாதன் தலைமையில் நடைபெறும். இந்நிகழ்வில் மணிவிழா சிறப்பு நூல் வெளியிடப்படும். (ந-7)

# கற்பாறை விழுந்து ஏழு பேர் பலி

கண்டி அனிவத்த பிரதேசத்தில் உள்ள வீட்டுத் தொகுதியில் கற்பாறை ஒன்று விழுந்ததன் காரணமாக ஏழு பேர் உயிரிழந்ததுடன் 10 பேர் பலத்த காயங்களுக்குள்ளாகி கண்டி போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இடிபாட்டுக்குள் சிக்கியுள்ளவர்களை மீட்கும் பணியில் இராணுவத்தினரும் பொலிஸாரும் ஈடுபட்டுள்ளனர். கற்பாறைக்குள் சிக்குண்டுள்ள மற்றையவர்கலை மீட்பதற்காக இராணுவத்தினர் வெடிமருந்துகளை பயன்படுத்தி கற்பாறையை வெடிவைக்கும் பணியில் ஈடுபட்டனர். (ந-5)

# பாலத்தைக் கடந்த நால்வரை வெள்ளம் அடித்துச் சென்றது

வாகரை பிரதேசத்திலுள்ள பனிச்சங்கேணி பாலத்தை கடக்க முற்பட்ட நால்வர் வெள்ளத்தால் அடித்துச் செல்லப்பட்டுள்ளனர். நேற்று இரவு 7மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. இந்நால்வரும் பனிச்சங்கேணியிலிருந்து வாகரை நோக்கி சைக்கிளில் சென்றபோதே வெள்ளத்தால் இழுத்துச் செல்லப்பட்டுள்ளனர்.

இப்பாலத்துக்கு மேலாக வெள்ளம் பாய்வதால் அங்கு செல்ல வேண்டாம் என அங்கிருந்த படையினர் தடுத்த போதிலும் மேற்படி நால்வரும் அதை மீறிச் சென்றதாக படையினர் தெரிவித்துள்ளனர். (ந-5)

# யாழ்.நகர் தனியார் கட்டிடங்களிலிருந்து படையினர் அடுத்த மாதம் வெளியேறுவர்

## யாழ்.தளபதி மகிந்த ஹத்துருசிங்க தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகரில் இராணுவத்தினர் பயன்படுத்தி வரும் சகல தனியார் வீடுகளும் ஹோட்டல்களும் அடுத்த மாதம் 15ஆம் திகதி உரியவர்களிடம் ஒப்படைக்கப்படும் என்று யாழ்.கட்டளைத்தளபதி மேஜர் ஜெனரல் மகிந்த ஹத்துருசிங்க தெரிவித்தார்.

யாழ். நகரின் முக்கிய பகுதிகளில் பிரகடனப்படுத்தப்பட்டிருந்த உயர் பாதுகாப்பு வலயங்கள் நீக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். இது தொடர்பில் யாழ்.கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மகிந்த ஹத்துருசிங்க தெரிவித்துள்ளதாவது.

குடாநாட்டின் பாதுகாப்புத் தொடர்பில் இராணுவத்தினர் பொறுப்புடன் செயற்படுகிறார்கள் பொலிஸாரின் உதவியுடன் முழு நாளும் பாதுகாப்புச் செயற்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

யாழ்ப்பாண நகர மத்தியிலுள்ள சுபாஸ் ஹோட்டல் மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் நடைமுறையிலிருந்த உயர்பாதுகாப்பு வலயம் நீக்கப்பட்டுள்ளது. அங்கு ஸ்தாபிக்கப்பட்டிருந்த 51ஆவது படைப்பிரிவு கோப்பாயிலுள்ள அரசாங்க இடத்துக்கு மாற்றப்பட்டுள்ளது.

அடுத்த மாதம் சுபாஸ் ஹோட்டலும் அதனை அண்டிய பிரதேசங்களும் உரிமையாளர்களிடம் ஒப்படைக்கப்படும். சாவகச்சேரி, யாழ்ப்பாண மாநகரம் ஆகிய இடங்களில் பிரகடனப்படுத்தப்பட்டிருந்த உயர்பாதுகாப்பு வலயம் நீக்கப்பட்டுள்ளது. பாதுகாப்புச்செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவின் அறிவுறுத்தலுக்கமைய யாழ்.குடாநாட்டில் சிவில் நிருவாகத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்கு இராணுவத்தினர் அளப்பெரிய சேவைகளை ஆற்றுவதாகவும் மேஜர் ஜெனரல் குறிப்பிட்டார். (ந-5)



உலகக்கிண்ண கிரிக்கெட் போட்டிகள்–2011, இலங்கை, இந்தியா, பங்களாதேஷ் ஆகிய நாடுகளில் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 19ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள நிலையில் இலங்கை அணி சார்பில் போட்டிகளில் பங்குபற்றவுள்ள வீரர்களின் தெரிவு கடந்த வெள்ளிக்கிழமை 7ஆம் திகதி தீர்மானிக்கப்பட்டது. இதனை அடுத்து போட்டிகளுக்கு தெரிவாகியுள்ள வீரர்களுக்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நேற்றுமுன்தினம் வாழ்த்து தெரிவித்தார். இந்நிலையில் ஜனாதிபதியுடன் கிரிக்கெட் அணி வீரர்கள் கலந்துரையாடுவதை படத்தில் காணலாம்.

# மன்னாரில்...

முகாம்களாக உள்ள புனர்வாழ்வு நிலையங்களில் உள்ள முன்னாள் விடுதலைப் புலிப் போராளிகள் அல்லது அத்தகையவர்கள் என சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டவர்களை விடுதலை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் எனவும் இங்கு கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டிருக்கின்றன.

கடந்த 5 மாதங்களுக்கு மேலாக கொழும்பு உட்பட பல்வேறு இடங்களில் அமர்வுக்களை நடத்தி விசாரணைகளை மேற்கொண்ட கற்றறிந்தபாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு இந்த அமர்வுடன் வட மாகாணத்துக்கான அமர்வுகளை பூர்த்திசெய்து கொள்வதாக தெரிவிக்கப்படுகின்றது.

தொடர்ந்தும் அதன் விசாரணைகள் நடைபெறும் என்றும் விசாரணை முடிபில் அறிக்கைகளும் சிபார்சுகளும் ஜனாதிபதியிடம் கையளிக்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டிருக்கின்றது. (ந-5)

# யாழில் இடம்...

தனிப்பட்ட முறுகல் நிலைகளால் இடம்பெற்றுள்ளது. அத்துடன் கம்பஹா மாவட்டம் உள்ளிட்ட தென்பகுதி போன்று யாழ். மாவட்டத்தில் பாதாள உலகக்குழுக்கள் இல்லை.

இந்நிலையில் திடீரென பொலிஸாரை மேலதிகமாகக் குவித்து பாதுகாப்பை அதிகரித்தால் மக்கள் பதற்றமடை வார்கள்.

எனினும் சட்டம்,ஒழுங்கை கடுமையாக அமுல்படுத்தி குற்றச்செயல்களை தடுக்க பொலிஸார் நடவடிக்கை எடுப்பர். இவ்வாறு பொலிஸ்மா அதிபர் மகிந்த பாலசூரிய தெரிவித்தார். (ந-5)

# விடுதலைப்புலிகளின் ஆயுதக்...

வடகிழக்கு கடற்பகுதியில் பயணித்த விடுதலைப்புலிகளின் ஆயுதக் கப்பல் ஒன்றை இலங்கைக் கடற்படையினர் தாக்க முனைந்த சமயம் விடுதலைப்புலிகளுக்கு சரியான சமயத்தில் தகவல்களைக் கொடுத்து போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு காப்பாற்றியதாக 2003ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 23 ஆம் திகதி அனுப்பப்பட்ட அமெரிக்கத் தூதரகத்தின் தகவலில் தெரிவிக்கப்பட்டது.

இதனால் ஆத்திரமடைந்த முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவரான நோர்வேயின் ஓய்வுபெற்ற ராணுவ அதிகாரி மேஜர் ஜெனரல் ரைகேவ் ரெலிப்சென் என்பவரை நீக்க வேண்டும் என கடிதம் அனுப்பியிருந்தார்.

விடுதலைப்புலிகளின் கப்பலை கடற்படையினர் கண்டறிவதை போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு தடுத்துள்ளது. அதற்கு ரெலிப்சென் தான் முக்கிய காரணம். அவர் தொலைபேசி மூலம் விடுதலைப்புலிகளுக்கு தகவல்களை வழங்கியிருந்தார். அதனைத் தொடர்ந்து விடுதலைப்புலிகளின் கப்பல் தப்பிச்சென்றுவிட்டதென சந்திரிகா நோர்வேக்கு அனுப்பிய கடிதத்தில் தெரிவித்திருந்தார்.

இதனைத் தொடர்ந்து அக்ரோபர் 16ஆம் திகதி நடைபெற்ற சம்பவம் தொடர்பில் அமெரிக்கத் தூதுவர், கண்காணிப்புக்குழுவின் தலைவர் ரெலிப்செனுடன் கலந்துரையாடல் ஒன்றை மேற்கொண்டிருந்தார்.

இதன்போது விடுதலைப்புலிகளின் கப்பல் ஒன்று வடக்குக்கிழக்குக் கடலில் பயணிக்கின்றதா என தாம் தவறுதலாக விடுதலைப் புலிகளிடம் தொலைபேசிமூலம் கேட்டுவிட்டதாக ரெலிப்சென் தெரிவித்திருந்தார்.

எனினும் ரெலிப்செனின் நடவடிக்கைகளில் தனக்கு சந்தேகம் உள்ளதாகவும் அவரை நீக்கும் படியும் சந்திரிகா வலியுறுத்தியிருந்தார் என அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-5)

STUDY & WORK IN U.K

- விசா கிடைத்த பின்பே கல்லூரிக் கட்டணம் செலுத்தும் வசதி.
- பகுதிநேர வேலைவாய்ப்புக்கான 100% உத்தரவாதம்.
- 3 நாட்களுக்குள் CAS LETTER கிடைக்கும் வகையில் துரித ஏற்பாடுகள்.
- குடும்பமாக செல்லக்கூடிய வாய்ப்புகள்.
- தற்போது U.Kயில் கல்வி கற்றுக் கொண்டிருப்பவர்களுக்கு கனடாவில் கல்வியைத் தொடரும் வசதிகளை செய்து தருகிறோம்.

அலுவலக நேரம்:-
கிழமை நாட்களில்
காலை 9.00–மாலை 4.00

அலுவலக விலாசம்:-
245, பலாலி வீதி,
(Baby Photo அருகாமை)
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
தொடர்பு:- 0770871616
(3397)

பொருளியல்
A/L Day Class
A/L Day Classes நடைபெறுகிறது

| SUBRA சித்தன்கேணி | SUBRA வட்டுக்கோட்டை |
|---|---|
| சனி, ஞாயிறு, புதன், நேரம்: 2-3 | திங்கள், செவ்வாய், வியாழன், நேரம்:-2-3 |

A/L 2013 ஆரம்பமாகி நடைபெறுகிறது.
English Medium தமிழ் மூலம்
BY: S.S. சிறி
(சு-2128)

தொடர்பு கொள்ளவும்
GA 8759 (சுப்பர் கப்) இலக்கம் உடைய மோட்டார் சைக்கிள் உரிமையாளரை வலம்புரி அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம். (இ)

பொருளியல்
K.பிரதீபன் (BBA)
A/L 2013,2012,2011 & Day
வகுப்புக்கள் நடைபெறும் இடங்கள்
NEW SCIENCE HALL
கன்னாதிட்டி | யாழ் நகர்
AAC அரியாலை / VINYI'S சுன்னாகம்
A/L 2011 Paper Class நடைபெறுகின்றது
(3388)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3.2 ஆம் ஒழுங்கை [illegible] னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 10.01.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.